# சொற்களை ஒழுங்குப்படுத்திச் சொற்றொடர் ஆக்குதல்

ஒரு சொற்றொடர் எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்ற அமைப்புடன் இருக்க வேண்டும்.

பொதுவாகத் தமிழ்ச் சொற்றொடர்களில் முதலில் எழுவாயும் கடைசியில் பயனிலையும் வரும். இடையில் செயப்படுபொருள் மற்றும் பிறச்சொற்கள் வரும்.

ஒழுங்கற்ற முறையில் தரப்பட்டிருக்கும் சொற்களை சரியான முறையில் தொடராக எழுத வேண்டும்.

**தேர்வு நோக்கில் சில சொற்றொடர்கள்:**

- குன்றின் மேல் எரியும் விளக்கு
- வல்லவர் நல்லவராக இருக்க வேண்டும்
- தூய நெஞ்சினர் துன்பம் செய்யார்
- மின்னுவது எல்லாம் பொன் அல்ல
- நீதிக்குப் போராடாதவன் நடை பிணம்
- தமிழர்கள் வாழ்வின் இலக்கணம் அறிந்தவர்கள்
- ஆலயம் தொழுவது சாலவும் நன்று
- எறும்பு ஊரக் கல்லும் தேயும்
- பசுவைப் பிரிந்த கன்று போல
- இலை மறைக் காய் போல
- இருதலைக் கொள்ளி எறும்பு போல
- குரங்கு கைப்பட்ட பூமாலை போல
- ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்
- உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?
- நாடும் மொழியும் நமதிரு கண்கள்
- பண்பட்ட பைந்தமிழ் பாழ்பட்டுக் கிடந்தது
- கடைமடை திறந்தது போல
- யானைப் பசிக்குச் சோளப்பொரியா?
- ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்

**(எ. கா) சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குதல்**

- கல்வி தூக்குமரம் நல்காக் கசடர்க்கு - கல்வி நல்காக் கசடர்க்கு தூக்குமரம்
- பண்பில்லா தவர் போல்வர் மக்கட் மரம் - மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்
- சொல்லுக்கு உறுதி இரண்டும் நாலும் - நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
- காம்புகள் வந்த கோடரிக் கெடுக்க குடியைக் -குடியைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புகள்
- சுகமும் உண்டு இடமெங்கும் சுத்தமுள்ள - சுத்தமுள்ள இடமெங்கும் சுகமும் உண்டு
- ஒக்கவே செம்பொன்னும் நோக்குவார் ஓடும் - ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
- ஆறு மேல் மாடுகள் ஏறின மலை - மாடுகள் ஆறு, மலை மேல் ஏறின
- தானம் சுருங்கும் வானம் சுருங்கின் - வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
- பன்மலை ஆற்றுடன் பஃறுளி அடுக்கத்து - பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து
- கெண்டையை வராலைப் போட்டு இழு - கெண்டையை போட்டு வராலை இழு
- இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம். - சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்
- மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது. - பறவை இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது.
- மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார் - சாண்டியாகோ மிகப்பெரிய மீனைப் பிடித்தார்
- மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை. - இந்தியாவின் பறவை மனிதர் டாக்டர் சலீம் அலி
- கதிரவன் மறையும் காலையில் உதித்து மாலையில் - கதிரவன் காலையில் உதித்து மாலையில் மறையும்
- மணிபல்லவத் சென்றாள் மணிமேகலை தீவிற்குச் - மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்.
- வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்து அமைந்த எழுத்து. - தமிழ் கோடுகளால் வளைந்து அமைந்த எழுத்து வட்டெழுத்து எனப்படும்.

- உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும். - உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.
- வென்றதை பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம். - பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்
- கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும். - உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்
- ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது. - அம்புவிடும் கலையை தமிழ் ஏகலை என்றது.

**கலைந்துள்ள சொற்களை வரிசைப்படுத்தித் தொடர்களாக எழுதுக:**

1. **கண்கள் நாட்டின் பெண்கள்.**

   விடை: பெண்கள் நாட்டின் கண்கள்.

2. **முதுகெலும்பு நாட்டின் விவசாயமே**

   விடை: நாட்டின் முதுகெலும்பு விவசாயமே

3. **தரும் உழைப்பே உயர்வு**

   விடை: உழைப்பே உயர்வு தரும்.

4. **போன்றது பொன் காலம்**

   விடை: காலம் பொன் போன்றது.

5. **துளி வெள்ளம் பெரு சிறு**

   விடை: சிறு துளி பெரு வெள்ளம்

**சொல்லை இடம் மாற்றிப் பழமொழியைக் கண்டுபிடிக்க:**

1. **மேல் உழுவதை அகல விட உழு ஆழ**

   விடை: அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்

2. **வளையாதது வளையாது ஐம்பதில் ஐந்தில்**

   விடை: ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது

3. **மிஞ்சினால் அளவுக்கு நஞ்சு அமிழ்தமும்**

   விடை: அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு

4. **குற்றம் சுற்றம் பார்க்கின் இல்லை**

   விடை: குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

5. **வருத்தம் சோம்பல் முதுமையில் இளமையில்**

   விடை: இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம்

**முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. காட்டில் | விலங்குகள் | நடந்தது | கூட்டம் | |
| **விடை**: விலங்குகள் கூட்டம் காட்டில் நடந்தது | | | | |
| 2. இரவுக்காவல் | நீங்கள்தாம் | அமைச்சர் | ஆந்தையாரே | |
| **விடை**: ஆந்தையாரே நீங்கள்தாம் இரவுக்காவல் அமைச்சர் | | | | |
| 3. முயல் | ஓடும் | வேகமாக | அதி | |
| **விடை**: முயல் அதி வேகமாக ஓடும் | | | | |
| 4. கூடாது | யாரையும் | போடக் | எடை | குறைவாக |
| **விடை**: யாரையும் குறைவாக எடை போடக் கூடாது | | | | |

**சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரை உருவாக்குக:**

எ.கா. சுதந்திரத்தை கொடுக்க என் மாட்டேன் விட்டு

**விடை: என் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன்**

**1. கொழு, கொழு அழகையும் புகழ்ந்தது நாயின் உடம்பையும் ஓநாய்.**

விடை: ஓநாய் நாயின் கொழு, கொழு அழகையும் உடம்பையும் புகழ்ந்தது.

**2. நாய் பார்த்தால் வீட்டுக்காரர்களைப் ஆட்ட வாலை வேண்டும்.**

விடை: நாய் வீட்டுக்காரர்களைப் பார்த்தால் வாலை ஆட்ட வேண்டும்.

**முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக:**

**1. செல்லலாம் இரை தேடச் புல்வெளியில்**

விடை: புல்வெளியில் இரை தேடச் செல்லலாம்

**2. அழைத்துச் நண்பனை செல்கிறாய் எங்கு**

விடை: நண்பனை எங்கு அழைத்துச் செல்கிறாய்

**3. கட்டை முதுமையில் உயரம் இளமையில்**

விடை: இளமையில் உயரம் முதுமையில் கட்டை

**முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி தொடர் உருவாக்குக**

**1. ஒன்று கொக்கு இருந்தது குளக்கரையில்**

விடை: கொக்கு ஒன்று குளக்கரையில் இருந்தது.

**2. எண்ணியது சாப்பிட மீன்களைச்**

விடை: மீன்களைச் சாப்பிட எண்ணியது

**3. அனைத்தும் சென்றன விளையாடிச்**

விடை: அனைத்தும் விளையாடிச் சென்றன.

# தொடர் அமைப்பு

எழுத்துகள் ஒன்றோ பலவோ சேர்ந்து பொருள் தரும்போது சொல்லாகிறது. சொற்கள் பல சேர்ந்து தொடர்கள் உருவாகின்றன. பல சொல் சேர்ந்து வந்தாலும், பொருள் முடிவுபெற்று வந்தால் மட்டுமே அவை தொடர்கள் எனப்படும். தொடருக்கும் (Sentence) சொற்றொடருக்கும் (Phrase) சிறு வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாக, "வட்டமான நிலா" என்பது, ஒரு சொற்றொடர். "நான் வட்டமான நிலாவைக் கண்டேன்" என்பது பொருள் முடிவு பெற்ற தொடர். நம்முடைய பேச்சிலும்

எழுத்திலும் இவ்விரண்டுமே பயன்பாட்டில் உள்ளன. தொடர் உருவாவதற்கு எழுவாய், செயப்படுபொருள், பயனிலை தேவை. இவை மூன்றனுள் ஏதேனும் ஒன்று இல்லாமல் கூடத் இத்தொடர் அமையலாம்.

**எழுவாய்:**

- சொற்கள் பல தொடர்ந்து வந்து ஒரு கருத்தை உணர்த்தினால் அது தொடர் எனப்படும். ஒரு தொடருக்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் இன்றியமையாதவை.
- செயப்படுபொருள் இல்லாமலும் தொடர் அமையலாம். ஒரு தொடரில் முதலில் எழுவாயும் இறுதியில் பயனிலையும் வரும். சில தொடரின் இறுதியில் செயப்படுபொருளும் வரும். சில
- தொடர்களில் வைப்புமுறை மாறியும் வரும்.
- தொடர் அல்லது சொற்றொடர் என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இணையான வடமொழிச்சொல் வாக்கியம் என்பதாகும். தொடர் என்றாலும் வாக்கியம் என்றாலும் ஒரே பொருளைத்தான் உணர்த்தும்.
- ஒரு தொடர் உருவாவதற்குக் காரணமாக அமைவது எழுவாய். அல்லது ஒரு தொடரில் யார், எது, எவை, யாவர் எனும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய் ஆகும். எழுவாய் வெளிப்படையாக வருவதும் உண்டு. மறைந்து வருவதும் உண்டு.
- அப்படி மறைந்து வரும் எழுவாயைத் தோன்றா எழுவாய் என அழைப்பர். எழுவாய் எப்போதும் ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல்லாக மட்டுமே வரும். இஃது உயர்திணையையும் குறிக்கும் அஃறிணையையும் குறிக்கும்; ஒருமையாகவும், பன்மையாகவும் வரும். செயலைக் குறிக்கும் வினைச்சொல்லாக எழுவாய் வராது.

**எடுத்துக்காட்டு - 1 (வெளிப்படையாக வரும் எழுவாய்)**

- கவிதா கவிதை எழுதினாள். (யார்)
- மாணவர்கள் பாடம் படித்தனர் (யாவர்)


- நாய் வீட்டைக் காக்கும் (எது)
- பறவைகள் இரை தேடின (எவை)
- "கவிதா கவிதை எழுதினாள்" இந்தத் தொடரில் செயலைச் செய்தது யார்? என்னும் வினாவை எழுப்பும்போது கவிதா என்னும் சொல் விடையாகக் கிடைக்கின்றது. கவிதா கவிதை எழுதினாள் என்னும் தொடரில் எழுவாய் "கவிதா" ஆகும். இது வெளிப்படையாக வந்துள்ள எழுவாய்.

**எடுத்துக்காட்டு - 2 (மறைந்து வரும் எழுவாய் / தோன்றா எழுவாய்)**

- பாடம் படி
- அறம் செய விரும்பு
- “பாடம் படி” இந்தத் தொடரில் செயலைச் செய்வது யார்? என்னும் வினாவை எழுப்பும்போது பாடம் படி என்பதில் நீ என்னும் எழுவாய் மறைந்து வந்துள்ளது. எனவே இங்கு நீ என்பது தோன்றா எழுவாய் ஆகும்.

**பயனிலை:**

ஒரு தொடரில் என்ன செயல் நிகழ்கிறது எனக் கேள்வி கேட்கப்படும்போது அதற்கான விடையாக அமைவது பயனிலை. பயனிலை வினைச் சொல்லாக அமையும். பயனிலையை மூவகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு,




**செயப்படுபொருள்:**

ஒரு தொடரில் எதை, யாரை எதனை, எவற்றை எனக் கேட்கப்படும் வினாவுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படுபொருள் ஆகும். செயப்படுபொருள் என்பது எழுவாயினால் செய்யப்படுகின்ற பொருளாகும். இஃது இரண்டாம் வேற்றுமை உருபினை ஏற்று வரும். சில தொடர்களில் செயப்படுபொருள் இல்லாமலும் வரும்.

**எடுத்துக்காட்டு - 1**

- குயவன் பானை வனைந்தான்

இத்தொடரில் குயவன் - எழுவாய், பானை - டுசயப்படுபொருள், வனைந்தான் - பயனிலை. எதனைச் செய்தான் என்னும் வினாவிற்குப் பானை என்னும் சொல் விடையாகக் கிடைக்கிறது.

இவ்வாறு செயப்படுபொருள் பெற்றுவரும் வினைச் சொற்களைச் "செயப்படுபொருள் குன்றா வினை" என அழைப்பர்.

**எடுத்துக்காட்டு - 2**

- பனை விழுந்தது

இத்தொடரில் பனை - எழுவாய், விழுந்தது - பயனிலை. செயப்படுபொருள் இல்லை. இவ்வாறு செயப்படுபொருள் இல்லாமலும் ஒருடுதாடர் வரலாம். இவ்வாறு செயப்படுபொருள் பபறாத வினைச் சொற்களைச் "செயப்படு பொருள் குன்றியவினை" என அழைப்பர்.

**தொடர் அமைப்பு:**

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| அம்மா | பாடல் | பாடுகிறார் |
| யாழினி | படம் | வரைகிறாள் |
| ஆனந்தி | பள்ளி | செல்கிறாள் |

**தொடரமைப்பு சிறப்பு:**

- எழுவாய் - செயப்படுபொருள் - பயனிலை

  நான் பாடத்தைப் படித்தேன்
- செயப்படுபொருள் - எழுவாய் - பயனிலை

  பாடத்தை நான் படித்தேன்
- பயனிலை - எழுவாய் - செயப்படுபொருள்

  படித்தேன் நான் பாடத்தை
- எழுவாய் - பயனிலை - செயப்படுபொருள்


  நான் படித்தேன் பாடத்தை
- செயப்படுபொருள் - பயனிலை - எழுவாய்

  பாடத்தைப் படித்தேன் நான்.

இவ்வாறான தொடர் சிறப்பு என்பது தமிழ்மொழிக்கு மட்டுமே உரிய சிறப்பாகக் கருதப்படுகிறது. வேறெந்த மொழிக்கும் இச்சிறப்பு இல்லை. ஆயினும் தமிழில் எல்லாத் தொடர்களையும் இவ்வாறு மாற்ற இயலாது.

**எ.கா. பறவைகள் இரை தேடின.**

தொடர் அல்லது சொற்றொடரை அதன் அமைப்பு அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு,




**கருத்துவகைத் தொடர்கள்:**

- கருத்துவகைத் தொடரை நால்வகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு,

**செய்தித் தொடர்:**

- ஒரு செய்தியைத் தெளிவாகக் கூறும் தொடர் செய்தித் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- கம்பர் இராமாயணத்தை இயற்றினார்
- இராஜராஜன் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான்
- முதல்வர் துபாய் சென்றார்
- செழியன் அயராது படித்துத் தேர்வில் வெற்றி பெற்றான்
- கண்ணதாசன் சிறுகூடல்பட்டியில் பிறந்தார்


**வினாத் தொடர்:**

- வினாப் பொருளைத் தரும் தொடர் வினாத்தொடர் எனப்படும். அதாவது, என்ன? என்? எங்கு? எவ்வாறு? யார்? போன்ற வினாக்களுக்கு விடையாக வரும் தொடர் வினாத் தொடராகும்.
- செழியா என்ன சாப்பிட்டாய்?

- கவிதா நீ என் நேற்று உடற்பயிற்சி செய்யவில்லை?
- அமுதன் எங்கு வேலை செய்கிறான்?
- இந்த இடத்தில் தவறு எவ்வாறு நடந்தது?
- தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?
- அவர்தாம் தமிழ் ஆசிரியரா?
- இதைக் கூறியவர் யாரோ?
- தமிழினி எங்கே செல்கிறாய்?
- குணா பள்ளிக்குப் போவாயா?
- வளவன் எங்கே சென்றான்?

**விழைவுத் தொடர்:**

விழைவுத் தொடரை நால் வகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:




**1. கட்டளைத் தொடர் (ஏவல்):**

- ஒருவர் மற்றொருவரைப் பார்த்து ஒரு செயலைச் செய்யும்படி கட்டளையிடுவது கட்டளைத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

பாடம் படி.

இத்தொடர் ஆசிரியர், மாணவனைப் பார்த்துப் பாடத்தை நன்றாகப் படி எனக் கட்டளை இடுவதாக அமைந்துள்ளது. கட்டளைத் தொடரின் இறுதியில் கட்டாயம் முற்றுப்புள்ளி (.)வரவேண்டும்.

- கதை சொல்
- பள்ளிக்கூடத்திற்குப் போ.
- விரைந்து வா.
- விரைவாகச் செல்.

- தொலைபேசியை எடு.
- சொன்னதைக் கேள்.
- பார்த்து நட.
- மெதுவாக உண்.
- பாடத்தைக் கவனி.

**2. வேண்டு கோள்:**

- ஒருவர் மற்றொருவரைப் பார்த்து எனக்கு இந்தப் பொருளைத் தருக என வேண்டுவது வேண்டுகோள் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- எனக்குப் பசிக்கிறது சோறு தருக.
- எனக்குத் தாகமாக இருக்கிறது தண்ணீர் தருக.
- எழுதுவதற்கு எழுதுகோல் தருக.
- படிக்கத் தமிழ் நூல் தருக.
- வசிக்க இடம் தருக.

இத்தொடர்களில் தருக எனும் சொல் வேண்டுதல் பொருளில் அமைந்துள்ளது. வேண்டுகோள் தொடரின் இறுதியில் முற்றுப் புள்ளி(.) இட வேண்டும்.

**3. வாழ்த்துதல்:**

- ஒருவர் மற்றொருவரைப் பார்த்து வாழ்த்தும் பொருட்டு அமையும் தொடர் வாழ்த்துதலாகும்.

**எடுத்துக்காட்டு:**

- மணமக்கள் பல்லாண்டு வாழ்க!
- நீடூழி வாழ்க
- நோய், நொடியின்றி வாழ்க!
- தமிழ் வாழ்க!
- பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!

வாழ்த்துத் தொடரின் இறுதியில் ஆச்சரியக் குறி (!) சேர்ந்து வரவேண்டும்.

**4. வைதல் (திட்டுதல்):**

நமக்கு ஒரு செயல் பிடிக்காமல் இருக்கலாம் அல்லது நமக்குப் பிடிக்காத செயலை ஒருவர் செய்யலாம். அப்போது நாம் என்ன செய்வோம்? அவரைக்

கடிந்துகொள்வோம் அல்லவா? அப்படிக் கூறுவதுதான் வைதல் அதாவது, திட்டுதல் எனப்படும்.


**எடுத்துக்காட்டு:**

- கல்லாமை ஒழிக!
- மது ஒழிக!
- தீமை கெடுக!
- வறுமை ஒழிக!
- தீண்டாமை ஒழிக!
- பெண்ணடிமை ஒழிக!
- ஆணவம் அழிக!

ஒழிக என்னும் சொல்லின் இறுதியில் உணர்ச்சிக்குறி (!) கட்டாயம் வரவேண்டும். 'ஒழிக' என்னும் சொல்லின் பொருள் வைதல் பொருட்டு வந்துள்ளது.

**உணர்ச்சித் தொடர்:**

- உணர்ச்சி தோன்ற கூறும் தொடரை உணர்ச்சித் தொடர் என்பர். இவ்வுணர்ச்சித் தொடரை நால்வகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு,




**1. மகிழ்ச்சித் தொடர்**

- ஒருவர் சொல்லும் சொல் அல்லது கருத்து மற்றவரின் மனத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துமானால் அது மகிழ்ச்சித் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- இரண்டு ஆண்டுகளுக்குமுன் வெளிநாடு சென்ற அண்ணன் இன்று ஊருக்கு வருகிறார். (மகிழ்ச்சி)
- தேசிய அளவில் நடைபெற்ற சிலம்பம் போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு பதக்கங்களைக் குவித்தனர். (பள்ளிக்குப் பெருமை)
- நகைக்கடன், பயிர்க்கடன் முற்றிலும் தள்ளுபடி. (உழவர்களுக்கு மகிழ்ச்சி)

**2. துன்பத் தொடர்**

- ஒருவர் சொல்லும் சொல் அடுத்தவர் மனத்தைத் துன்பப்படுத்துமானால் அது துன்பத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- விபத்தில் சிக்கிய இருவருக்குப் பலத்த காயம் (துன்பம்).
- ஒடிசாவுக்குப் புயல் எச்சரிக்கை. 3 நாளுக்கு 95 விரைவு இரயில் ரத்து (துன்பம்).
- பயிர்கள் நீரில் மூழ்கின. விவசாயிகள் கவலை (துன்பம்).

**3. அச்சத் தொடர்**

- ஒருவர் சொல்லும் சொல் அல்லது செய்யும் செயல் அடுத்தவர் மனத்தை அச்சம் கொள்ளச் செய்யுமானால் அது அச்சத்தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- ஐயோ, பாம்பு! பாம்பு! (அச்சம்).
- ஜவாத் புயல் தமிழகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் (அச்சம்).
- மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச்செல்ல வேண்டா. வானிலை மையம்எச்சரிக்கை (அச்சம்).

**4. பெருமிதத் தொடர்**


- ஒருவர் சொல்லும் சொல் அல்லது செய்யும் செயல், பார்க்கும் காட்சி, அடுத்தவர் மனத்தைப் பெருமைப்படுத்துமானால் அது பெருமிதத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- தமிழரின் சிறப்பு, தஞ்சை பெருவுடையார் கோவில்! (பெருமிதம்).
- தாஜ்மகாலின் அழகுதான் என்னே! (பெருமிதம்).
- என்னே! வள்ளுவர் கோட்டத்தின் அழகு! (பெருமிதம்).
- கரிகாலனின் கல்லணை காலத்தின் வரலாறு! (பெருமிதம்).

**அமைப்புவகைத் தொடர்:**

- அமைப்புவகைத் தொடரை மூவகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு,




## 5. தனிநிலைத் தொடர்

- ஓர் எழுவாயோ ஒன்றுக்கும் மேற்பட்ட எழுவாயோ வந்து ஒரே பயனிலையைக் கொண்டு முடிவது தனிநிலைத் தொடர் எனப்படும். பயனிலை என்பது முடிக்கும் சொல். எழுவாய், செயப்படுபொருள் இல்லாமலும் தொடர் அமையும்.

**எடுத்துக்காட்டு:**

- செழியன் ஓவியம் வரைந்தான், இதில் செழியன் என்பது எழுவாய் வரைந்தான் என்பது பயனிலை இஃது ஓர் எழுவாய் ஒரு பயனிலைக் கொண்டு முடிந்த தனிநிலைத் தொடராகும்.
- கவிதா பாடம் படித்தாள்.
- சேகர் சிரித்தான்.
- நேற்று வயலில் ஆடுகள் மேய்ந்தன.
- பாம்பு படமெடுத்து ஆடியது.

இவை ஓர் எழுவாய், ஒரு பயனிலை அமைப்பு கொண்ட தனிநிலைத் தொடர்களாகும்.

**செழியன், அமுதன், யாழினி மூவரும் பரிசு பெற்றனர்:**

இதில் செழியன், அமுதன், யாழினி என்ற பெயர்கள் மூன்றும் எழுவாய்கள், பெற்றனர் என்பது பயனிலை. இது பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்த தனிநிலைத் தொடர் ஆகும்.

- மா, பலா, வாழை என்பன முக்கனி.
- காரி, பாரி, ஓரி முதலானோர் வள்ளல்கள் ஆவர்.
- கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் சிறந்த நண்பர்கள்.
- சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டையில் கன மழை.
- பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுப்பு.

இவை பல எழுவாய்கள், ஒரு பயனிலை அமைப்பு கொண்ட தனிநிலைத் தொடர்களாகும்.

**தொடர்நிலைத்தொடர் அல்லது கூட்டுத்தொடர்:**

- ஓர் எழுவாய் பல பயனிலைகளைப் பெற்று வருவது தொடர்நிலைத்தொடர் அல்லது கூட்டுத்தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- தமிழர்கள் கொடைப்பண்பில் சிறந்தவர்கள்; வந்தாரை வாழவைக்கும் பண்பாளர்கள்; ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதிப்பவர்கள்.
- இதில் 'தமிழர்கள்' என்னும் எழுவாய், சிறந்தவர்கள்; பண்பாளர்கள்; ஒழுக்கத்தை மதிப்பவர்கள் ஆகிய பல பயனிலைகளைக் கொண்டு முடிகிறது. ஓர் எழுவாய் தொடர்ந்து வந்து பல பயனிலைகளுடன் கூடுவதால் இது தொடர்நிலைத்தொடர் அல்லது கூட்டுத்தொடர் எனப்படும்.
- வினைமுற்று, எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும்; முக்காலத்தில் ஒன்றை உணர்த்தும்; துணை, பால், எண் இடங்களைக் காட்டும்.
- (எ.கா.) ஜோதி முனைவர் பட்டம் பெற்றாள். இதில் 'பெற்றாள்' என்பது வினைமுற்று. இஃது உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை இடம் ஆகியவற்றைச் சுட்டுகிறது.
- பெரியார் சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடநம்பிக்கைகளை முறியடித்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறவே ஒதுக்கியவர்; சமூக மாற்றத்தை விரும்பியவர்; பெண்கள் சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர்; பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டவர். (இதில் பெரியார் என்பது எழுவாய்)
- மாதவி படித்தாள்; முதல் மதிப்பெண் பெற்றாள்; தங்கப்பதக்கம் வென்றாள்; நாளிதழுக்கும் தொலைக்காட்சிக்கும் பேட்டியளித்தாள். (இதில் மாதவி என்பது எழுவாய்)

**கலவைத் தொடர்:**

- ஒரு தனிநிலைத் தொடரானது ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட துணைத்தொடர்களுடன் கலந்து வருவது கலவைத் தொடர் எனப்படும்.
- கலவைத் தொடரில் உள்ள தனிநிலைத் தொடரானது துணைத் தொடர் அல்லது சார்புத் தொடர் இல்லாதபோதும் பொருள் முற்றுப்பெறும்; தனித்து இயங்கும் தன்மை கொண்டது.
- இதில் வரும் துணைத் டுதாடர் முற்றுப்பெறாமல் நிற்கும் தனிநிலைத் தொடரின் பொருளுக்குத் துணையாக நிற்கும்; இது தனித்துச் செயல்படாது.

**எடுத்துக்காட்டு:**

- சென்னையில் கனமழை பெய்ததால் ஏரி, குளங்கள் நிரம்பின.இதில் "ஏரி, குளங்கள் நிரம்பின" என்பது தனிநிலைத் தொடராகும். "கனமழை பெய்ததால்" என்பது துணைத் தொடராகும்.
- எவர், இரவும் பகலும் அயராது படிக்கிறாரோ, அவரே நல்ல மதிப்பெண் பெறுவர். இதில் “அவரே நல்ல மதிப்பெண் பெறுவர்" என்பது தனிநிலைத் தொடராகும். "எவர், இரவும் பகலும் அயராது படிக்கிறாரோ" என்பது துணைத் தொடராகும்.

**வினைவகைத் தொடர்:**

வினைவகைத் தொடர்களை எட்டு வகையாகப் பிரிக்கலாம் அவை பின்வருமாறு:

- உடன்பாட்டு வினைத் தொடர்
- எதிர்மறைத் தொடர்
- செய்வினைத் தொடர்
- செயப்பாட்டு வினைத் தொடர்
- தன்வினைத் தொடர்
- பிறவினைத் தொடர்
- நேர்கூற்றுத் தொடர்
- அயற்கூற்றுத் தொடர்

**உடன்பாட்டு வினைத் தொடர்:**

- ஒரு செயல் அல்லது தொழில் நிகழ்வதைக் குறிப்பது உடன்பாட்டுத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- மழை பெய்ததால் பயிர் விளைந்தது.
- படித்ததால் தேர்ச்சி பெற்றான்.
- பயிற்சியால் இவற்றி பெற்றான்.
- அறத்தால் உயர்ந்தான்.

**எதிர்மறைத் தொடர்:**

- செயல் அல்லது தொழில் நிகழாமையைக் குறிப்பது எதிர்மறைத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- மழை பெய்யாததால் பயிர் விளையவில்லை.
- படிக்காததால் தேர்ச்சி பெறவில்லை.
- முயற்சி செய்யாததால் வெற்றி பெறவில்லை.
- அறம் இல்லாததால் தாழ்ந்து போனான்.

**செய்வினைத் தொடர்:**

- எழுவாயே செயலைச் செய்வதாகக் கூறுவது செய்வினைத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- கம்பர் இராமாயணத்தை இயற்றினார்.
- திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
- தவளை தன் வாயால் கெட்டது.

**செயப்பாட்டுவினைத் தொடர்:**

- செயப்படுபொருளை எழுவாயாகப் பெற்றும், எழுவாயோடு மூன்றாம் வேற்றுமை உருபைப் பெற்றும், பயனிலையோடு 'படு' என்பதைப் பெற்றும் வருகின்ற தொடர் செயப்பாட்டுவினைத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.
- கம்பராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டது.
- வெற்றிபெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.
- கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது.
- தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன.

**தன்வினைத் தொடர்:**

- எழுவாய் தானே செய்யும் செயலை உணர்த்துவது தன்வினைத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- சௌமியன் படித்தான்
- கயல்விழி ஓடினாள்
- கவிதா வரைந்தாள்

- வளவன் உணவு உண்டான்

**பிறவினைத் தொடர்:**

- எழுவாய் பிறரைக் கொண்டு தொழில் செய்விப்பதை உணர்த்துவது பிறவினைத்டுதாடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- தமிழாசிரியர் கற்பித்தார்.

**நேர்கூற்றுத் தொடர்:**

ஒருவர் கூறியதை எவ்வித மாற்றமும் இல்லாமல் அப்படியே எடுத்துக் கூறுவது நேர்கூற்றுத் தொடர் எனப்படும். இந்நேர்கூற்றுத் தொடர் தன்மை, முன்னிலை இடங்களில் வரும்.

**எடுத்துக்காட்டு:**

- "முகக்கவசம் அணியுங்கள்" எனத் தமிழக முதல்வர் மக்களுக்குக் கூறினார்.
- மணமக்களை "எல்லா வளமும் நலமும் பெற்று வாழவேண்டும்" எனச் சான்றோர் வாழ்த்தினார்.
- போருக்கு "இன்று போய் நாளை வா" என இராமன் கூறினார்.
- நாளை "தேர்வுக்குத் தயாராக வா" என ஆசிரியர் கூறினார்.
- இரமணன் "இன்று மழை பெய்யும்" எனக் கூறினார்.

**அயற்கூற்றுத் தொடர்:**

- ஒருவர் கூறியதை அப்படியே கூறாமல் அயலார் கூறுவது போல் கூறுவது அயற்கூற்றுத் தொடர் எனப்படும். தன்மை, முன்னிலை இடங்களில் வரும் எழுவாயைப் படர்க்கையில் அமைத்துக் கூறவேண்டும்.
    1. நேர்கூற்றில் இடம்பெறும் காற்புள்ளி, மேற்கோள் குறி ஆகியவை அயற்கூற்றில் இடம் பெறாது.
    2. 'என்று' 'என' ஆகிய இணைப்புச்சொற்கள் அயற்கூற்றில் வராது.
    3. தன்மைப் பெயரையும் முன்னிலைப் பெயரையும் படர்க்கைப் பெயராக மாற்ற வேண்டும்.
    4. படர்க்கைப் பெயர்கள் மாற்றமின்றி வரும்.
    5. துணைத்தொடரில் வரும் விளிப்பெயர்கள் நான்காம் வேற்றுமை உருபை ஏற்கும்.
    6. துணைத்தொடரில் வரும் பயனிலையுடன் 'ஆக' அல்லது 'ஆறு' என்னும் சொல்லைச் சேர்த்து அதனை முதன்மைத் தொடருடன் இணைக்கவேண்டும்.

7. இருதொடராகத் துணைத்தொடர்கள் இடம்பெற்றிருந்தால் எண்ணும்மை கொடுக்க வேண்டும்.
8. பாடல் அடிகள் மேற்கோளாய்த் துணைத்தொடரில் வரும்போது, அது எழுவாயாக மாறும்.
9. மேலும் நேர்கூற்று அயற்கூற்றாக மாறும்போது சில சொற்கள் மாற்றமடையும்.

**எடுத்துக்காட்டு:**

- வரியைச் செலுத்தும்படி மக்களுக்குத் துண்டறிக்கை தரப்பட்டது.
- மங்கை தோழியிடம், தான் தின்பண்டம் கொண்டு வருவதாகக் கூறினாள்.
- மாநகராட்சி குப்பைகளைத் தரம் பிரித்துத் தருமாறு மக்களிடம் கேட்டுக்கொண்டது.
- பருவத் தேர்வுக்குரிய விவரங்கள் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.
- இசை ஆசிரியர் மாணவர்களிடம் நாள்தோறும் பாடிப் பழகும்படி கூறினார்.
- சித்த மருத்துவர்கள் கபசுரக் குடிநீர் குடிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தினர்.

## செய்வினை, செயப்பாட்டு வினை - தன்வினை, பிறவினை

**வினை வகைகள்:**

வினைச்சொற்கள் முற்று, எச்சம் என்பதாக மட்டுமன்றி, அவை பயன்படுவதன் அடிப்படையில் பலவாகப் பகுத்துரைக்கப்படுகின்றன. அவ்வகையில்,

தன்வினை, பிறவினை; செய்வினை, செயப்பாட்டுவினை; உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை என்பன போன்ற பல வகைப்பாடுகள் உள்ளன.

**தன்வினை, பிறவினை:**

தன்வினை என்பது ஒருவர் தானே செய்வது. பிறவினை என்பது பிறரைச் செய்யும்படி ஆக்குவது.

கரையைச் **சேர்வான்**

என்னும் தொடரில், சேர்தலாகிய தொழிலை ஒருவன் செய்வான் என்பது பொருள்.

கரையில் **சேர்ப்பான்**

என்பது சொல்லாயின், வேறு யாரையோ அல்லது எதையோ சேரும்படி இவன் செய்வான் என்பது பொருளாகும், முன்னதில் சேரும் வினை இவனுடையது. பின்னதில் அவ்வினை வேறு ஒரு பொருளுக்கு உரியது.

**சேர்வான்** என்பது **தன்வினை**யாகிறது.

**சேர்ப்பான்** என்பது **பிறவினை** ஆகிறது.

| தன்வினை | பிறவினை | |
|---|---|---|
| வரு**ந்**துவான் | வரு**த்**துவான் | } இவற்றில் மெல்லொற்று (ந்,ங்) வல்லொற்றாகிப் (த்,க்) பிறவினை ஆயிற்று. |
| திரு**ந்**தினான் | திரு**த்**தினான் | |
| அட**ங்**கினான் | அட**க்**கினான் | |
| ஆ**டி**னான் | ஆ**ட்டி**னான் | } இவற்றில் வல்லொற்று (ட்,ற்) இரட்டித்துப் (ட்ட், ற்ற்) பிறவினை ஆயிற்று. |
| மா**று**வான் | மா**ற்று**வான் | |

பிறவினையாகும்போது வி, பி ஆகிய விகுதிகளில் ஒன்று, சேர்ந்து வருவதும் உண்டு.

நட - நடப்**பி** - நடப்**பி**த்தான்

செய் - செய்**வி** - செய்**வி**த்தான்

என்பனபோல வரும். சொல் வடிவை விட, அது உணர்த்தும் பொருளை வைத்தே தன்வினையா, பிறவினையா என அறிதல் வேண்டும்.

இனி, **செய்வினை, செயப்பாட்டுவினை** என்னும் வினைப் பகுப்பினைப் பார்ப்போம்.

**செய்வினை, செயப்பாட்டுவினை:**

**புத்தகம்** படிக்கிறேன்

**கொசு** கடித்தது

**நாயை** அடிக்கிறான்

இத்தொடர்களில் உள்ள வினைச் சொற்கள் செய்வினைச் சொற்களாகும். இவற்றை வேறு ஒரு முறையிலும் கூறலாம்.

புத்தகம் (என்னால்) **படிக்கப்படுகிறது.**

நான் (கொசுவால்) **கடிக்கப்பட்டேன்.**

நாய் (அவனால்) **அடிக்கப்படுகிறது.**

இத் தொடர்களில் **செயப்பாட்டு வினைகள்** உள்ளன. செய்வினையில் படிக்கிறேன் என்றிருந்த சொல், செயப்பாட்டு வினையில் படிக்கப்படுகிறது என மாறுகிறது. **படு** என்னும் துணைவினைச் சொல் இவை அனைத்திலும் சேர்ந்து வருகிறது.

**உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை**

**வருகிறேன்**, **செய்கிறான்**

**செய்வேன்**, **பெறுவான்**

என்பன போன்ற வினைச்சொற்கள் ஒரு வினையைச் செய்வதையோ, செய்யப் போவதையோ அறிவிக்கின்றன. இவற்றை **உடன்பாட்டு வினைகள்** என்கிறோம். ஒரு செயலைச் செய்வதற்கு உடன்பட்ட நிலையைத்தான் இவை அறிவிக்கின்றன.

**வாரேன்** (வர மாட்டேன் என்பது பொருள்)

**செய்யேன்** (செய்ய மாட்டேன் என்பது பொருள்)

**செய்யான்** (செய்ய மாட்டான் என்பது பொருள்)

**பெறான்** (பெற மாட்டான் என்பது பொருள்)

என்னும் சொற்கள் ஒருவன் ஒரு தொழிலைச் செய்ய உடன்படா நிலையை (அல்லது) எதிர்மறை நிலையைப் புலப்படுத்துகின்றன. எனவே இவை **எதிர்மறைவினைகள்** என்று சுட்டப்படுகின்றன. உடன்பாட்டு வினைச் சொற்களின் இடையில் **எதிர்மறை இடைநிலை** வந்து எதிர்மறைப் பொருளை உணர்த்துகின்றது.

செய் + **ஆ** + ஆன் - செய்யான்

தெரி + **அல்** + அன் - தெரியலன்

வந்து + **இல்** + அன் - வந்திலன்

இச் சொற்களில், ‘ஆ’, ‘அல்’, ‘இல்’ ஆகியன எதிர்மறைப் பொருள் உணர்த்துகின்றன. பெரும்பாலும் எதிர்மறைக்கு ‘ஆ’கார இடைநிலையே வரும்.

இக்காலத்தில் மாட்டான், மாட்டேன் என்பன போன்ற சொற்களால் எதிர்மறையைக் குறிக்கிறோம்.

சுருங்கச் சொன்னால், எதிர்மறை இடைநிலைகள் வாராத வினைகள் எல்லாம் உடன்பாட்டு வினைகளே. அவற்றைப் பெற்றிருப்பன எதிர்மறை வினைகளாகும்.

வினைமுற்றுச் சொற்களில் எதிர்மறை இருப்பது போன்று பெயரெச்ச, வினையெச்சச் சொற்களோடு 'ஆ' சேர்ந்தும் எதிர்மறைப் பொருள்படும்.

**செய்ய** வந்தேன், **செய்து** வந்தான் தொடர்களில் இடம்பெற்றுள்ள செய்ய, செய்து என்னும் சொற்கள் தமக்குப் பின் ஒரு வினைமுற்றுச் சொல்லைக் கொண்டே முடிவதால், வினையெச்சம் என்று சொல்லப் பெறுகின்றன.

**கேட்கும்** செவி, **காணும்** கண் என்னும் தொடர்களில் உள்ள, கேட்கும், காணும் என்னும் சொற்கள் தமக்குப்பின் ஒரு பெயர்ச்சொல் கொண்டு முடிவதால், அவற்றைப் பெயரெச்சம் என்கிறோம். இப்பெயரெச்ச, வினையெச்சச் சொற்களும் 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலை பெற்று வரும்.

| | | |
|---|---|---|
| கேள் + ஆ - **கேளாச்** செவி | } | எதிர்மறைப் பெயரெச்சம் |
| காண் + ஆ - **காணாக்** கண் | | |

| | | |
|---|---|---|
| **பாராது** இருந்தாள் | } | எதிர்மறை வினையெச்சம் |
| **எழுதாமல்** இருந்தான் | | |

எனவே, உடன்பாட்டு வினைகளே எதிர்மறை இடைநிலை பெற்று, வினைமுற்றுச் சொற்களிலும் எச்சச் சொற்களிலும் எதிர்மறையை உணர்த்தும் என்பதை அறிக.

**தன்வினைத் தொடர்:**

ஒரு வினையை எழுவாய் தானே செய்வது தன்வினை எனப்படும்.

**(எ. கா)**

1. பாத்திமா திருக்குறள் கற்றாள்.
2. பாத்திமா என்னும் எழுவாய், ஒரு செயலைத் தானே செய்வதால், இது தன்வினைத் தொடராகும்.
3. பந்து உருண்டது
4. அப்துல் நேற்று வந்தான்

**பிறவினைத் தொடர்:**

ஒரு வினையை எழுவாய் தானே செய்யாமல் பிறரைக் கொண்டு செய்விப்பது பிறவினை ஆகும். இதன் மற்றொரு பெயர் இயக்கு வினை ஆகும்.

(எ. கா)

1. பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்.
2. பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால் இது பிறவினைத் தொடர்.
3. பந்தை உருட்டினான்
4. அப்துல் நேற்று வரவழைத்தான்

**தன்வினை பிறவினையாக மாற்றும் முறைகள்:**

| முறை | தன்வினை | பிறவினை |
|---|---|---|
| 1) மெல்லினம் வல்லினமாதல் | அடங்கு நீங்கு | அடக்கு நீக்கு |
| 2) ஒற்று இரட்டித்தல் | ஓடு, வாடு | ஓட்டு, வாட்டு |
| 3) 'கு' சேர்தல் | போ | போக்கு |
| 4) 'வி' சேர்தல் | செய்தான் | செய்வித்தான் |
| 5) 'பி' சேர்தல் | கற்றான் | கற்பித்தான் |
| 6) வினையெச்சத்துடன் 'செய், பண்ணு' சேர்தல் | உண்டான்<br>ஓடினான் | உண்ணச் செய்தான்<br>ஓடப்பண்ணினான் |

**தன்வினையைப் பிறவினையாக்குவதற்குச் செய்ய வேண்டுவன:-**

1. தன்வினைப் பகுதியிலுள்ள மெல்லின மெய்யை வல்லின மெய்யாக மாற்ற வேண்டும்.

**எ.கா.**

- திருந்தினான் – திருத்தினான்.

2. தன்வினைப் பகுதியிலுள்ள வல்லின மெய்யெழுத்தை இரட்டிக்க வேண்டும்.

**எ.கா.**

- பழகினான் – பழக்கினான்.

3. தன்வினைப் பகுதியுடன் வி,பி, கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளில் ஒன்றைச் சேர்க்க வேண்டும்.

**எ.கா.**

- செய்தான் – செய்வித்தான்.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| அகல் | அகற்று |
| அமைவான் | அமர்த்துவான் |
| ஏறு | ஏற்று |

| | |
|---|---|
| செய் | செய்வி |
| உண் | உண்பி |
| பெருகு | பெருக்கு |
| வாடு | வாட்டு |
| மடங்கு | மடக்கு |
| கட | கட்டு |
| உருகு | உருக்கு |
| படித்தாள் | படிப்பித்தாள் |
| போனான் | போக்கினான் |
| உருண்டான் | உருட்டினான் |
| நடந்தாள் | நடத்தினாள் |
| எழுந்தான் | எழுப்பினான் |
| பயின்றான் | பயிற்றினான் |
| போ | போக்கு |
| பாய் | பாய்ச்சி |
| உருள் | உருட்டு |
| நட | நடத்து |
| எழு | எழுப்பு |
| பயில் | பயிற்று |
| உண் | உண்ணச்செய் |
| உறங்கு | உறங்கச்செய் |
| சேர்கிறேன் | சேர்க்கிறேன் |
| சேர்வேன் | சேர்ப்பேன் |
| சேர்ந்தேன் | சேர்த்தேன் |

**காரணவினைகள்:**

எழுவாய் தானே வினையை நிகழ்த்தாமல், வினை நிகழ்வதற்குக் காரணமாக இருப்பது காரணவினை எனப்படும்.

காரணவினைகள் வி, பி போன்ற விகுதிகளைக் கொண்டும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.

| **தன்வினை** | **பிறவினை** | **காரணவினை** |
|---|---|---|
| நடந்தான் | நடத்து | நடத்தச் செய்தார் |
| அடங்கு<br>திருந்தினான் | அடக்கு<br>திருத்தினான் | அடக்கச் செய்தாள்<br>திருந்தச்செய்தான் |
| ஆடினான் | ஆட்டினான் | ஆட்டுவித்தான்/ ஆடவைத்தான் |

| | | |
|---|---|---|
| மாறுவாள் | மாற்றுவாள் | மாற்றுவித்தாள்/ மாறச்செய்தாள் |
| செய்தான்<br>வா | செய்வித்தான்<br>வருவித்தார் | செய்யவைத்தான் வரவைத்தார் |
| காண் | காட்டு | காட்டுவி |
| ஆடு | ஆட்டு | ஆட்டுவி |

**செய்வினை வாக்கியம்:**

எழுவாய், செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் செய்வினைத் தொடர்.

செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வெளிப்பட்டோ (அ) மறைந்தோ வரும்.

எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்றவாரு வரும்.

**(எ. கா)**

1. கம்பர் இராமாயணத்தை இயற்றினார்.

   (எழுவாய்) (செயப்படுபொருள்) (பயனிலை).
2. சீதை மான்களை விரும்பினாள்.

   குருவி கூடு கட்டியது.
3. அன்பரசி சோறு சாப்பிட்டாள்.

   கவிதா உரை படித்தாள்

**செயப்பாட்டு வினை வாக்கியம்:**

செயப்படுபொருளை அதாவது எதனை செய்தாரோ அதனை முதலாய் வைத்து வாக்கியம் அமையும்.

செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்ற வரிசையில் வாக்கியம் அமைத்தல் வேண்டும்.

எழுவாயோடு மூன்றாம் வேற்றுமை உருபான 'ஆல்' சேர்ந்து வரும்.

**(எ. கா)**

1. பாடம் முருகனால் படிக்கப்பட்டது.
2. வீடு அவனால் கட்டப்பட்டது.
3. உரை கவிதாவால் படிக்கப்பட்டது.

**தொடர்களை மாற்றி உருவாக்குக:**

**அ) பதவியை விட்டு நீக்கினான் - இத்தொடரைத் தன்வினைத் தொடராக மாற்றுக.**

பதவியை விட்டு நீக்குவித்தான்.

**ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர்- இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.**

மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர

**இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே - இத்தொடரை செய்வினைத் தொடராக மாற்றுக.**

உண்ணும் தமிழ்த்தேனே

**ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் - இத்தொடரை செயப்பாட்டுவினைத் தொடராக மாற்றுக.**

திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுப்பட்டுள்ளன

**உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் - இத்தொடரைக் காரணவினைத் தொடராக மாற்றுக.**

நிலவன் சிறந்த பள்ளியில் படிபித்தான்.

**சொற்களைத் தொடர்களாக மாற்றுக:**

**அ) மொழிபெயர் - தன்வினை, பிறவினைத் தொடர்களாக.**

தன்வினை - மொழி பெயர்த்தாள்

பிறவினை - மொழி பெயர்ப்பித்தாள்

**ஆ) பதிவுசெய் - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.**

செய்வினை - பதிவு செய்தான்

செயப்பாட்டு வினை - பதிவு செய்யப்பட்டது

**இ) பயன்படுத்து - பிற வினை, காரண வினைத் தொடர்களாக.**

பிற வினை - பயன்படுத்துவித்தாள்

காரண வினை - பயன்படுத்தினாளா

**ஈ) இயங்கு - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.**

செய்வினை - இயங்கினாள்

செயப்பாட்டு வினை - இயக்கப்பட்டாள்

**எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க:**

**திடலில்**

1. நான் திடலில் ஓடினேன் (தன்வினை).
2. திடலில் மிதிவண்டியை ஓட்டினேன் (பிறவினை)
3. நான் நண்பர்களைத் திடலில் ஓடச்செய்தேன் (காரணவினை).

| **எழுவாய்/ பெயர்** | **வினை அடி** | **தன்வினை** | **பிறவினை** |
|---|---|---|---|
| நான் | ஓடு | நான் திடலில் ஓடினேன். | நான் திடலில் மிதிவண்டியை ஓட்டினேன். |
| காவியா | வரை | காவியா வேகமாக படம் வரைந்தாள். | காவியா வேகமா படம் வரைவித்தாள் |
| கவிதை | நனை | நான் கவிதை மழையில் நனைந்தேன். | நான் கவிதை மழையில் நனைவித்தேன். |
| இலை | அசை | செடியில் இலை வேகமாக அசைந்தது. | செடியில் இலை வேகமாக அசைவித்தது. |
| மழை | சேர் | மழை மண்ணைச் சேர்ந்தது. | மழை மண்ணைச் சேர்பித்தது. |

**தொடர்களை மாற்றி உருவாக்குக:**

**அ) பதவியை விட்டு நீக்கினான் - இத்தொடரைத் தன்வினைத் தொடராக மாற்றுக.**

பதவியை விட்டு நீக்குவித்தான்.

**ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர்- இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.**

மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர

**இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே - இத்தொடரை செய்வினைத் தொடராக மாற்றுக.**

உண்ணும் தமிழ்த்தேனே

**ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் - இத்தொடரை செயப்பாட்டுவினைத் தொடராக மாற்றுக.**

திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுப்பட்டுள்ளன

**உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் - இத்தொடரைக் காரணவினைத் தொடராக மாற்றுக.**

நிலவன் சிறந்த பள்ளியில் படிபித்தான்.

**செயப்படுபொருள் சொற்களை எழுதுக:**

**(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களை, நம்மை, வாழ்வியல் அறிவை)**

அ) தமிழ் ______________ கொண்டுள்ளது.

விடை: செவ்விலக்கியங்களை

ஆ) நாம் ______________ வாங்கவேண்டும்.

விடை: தமிழிலக்கிய நூல்களை

இ) புத்தகங்கள் ______________ கொடுக்கின்றன.

விடை: வாழ்வியல் அறிவை

ஈ) நல்ல நூல்கள் ______________ நல்வழிப்படுத்துகின்றன.

விடை: நம்மை

# மரபுத் தமிழ்

**மரபுத் தமிழ்:**

- திணை மரபு
- பால் மரபு
- இளமைப் பெயர்
- ஒலிமரபு
- வினைமரப
- தொகை மரபு

**இளமை மரபுச்சொற்கள்:**

- தாவரங்கள்: காய்களின் இளமை மரபு
- அவரைப்பிஞ்சு
- வெள்ளரிப்பிஞ்சு
- கத்தரிப்பிஞ்சு
- தென்னங்குரும்பை
- வாழைக்கச்சல்
- மாவடு

**விலங்குகள்: இளமை மரபு**

- குருவிக்குஞ்சு
- கழுதைக்குட்டி
- மான்கன்று
- சிங்கக்குருளை
- கோழிக்குஞ்சு
- எருமைக்கன்று
- நாய்க்குட்டி
- புலிப்பறழ்
- ஆட்டுக்குட்டி
- பன்றிக்குட்டி

- பூனைக்குட்டி
- கீரிப்பிள்ளை
- அணிற்பிள்ளை
- புலிப்பறழ்
- யானைக்கன்று
- மான்கன்று
- எருமைக்கன்று
- குதிரைக்குட்டி
- குரங்குக்குட்டி

**ஒலி மரபுச்சொற்கள்:**

- குயில் கூவும்
- கிளி கொஞ்சும்
- சிங்கம் முழங்கும்
- மயில் அகவும்
- கூகை குழறும்
- நரி ஊளையிடும்
- காகம் கரையும்
- குதிரை கனைக்கும்
- யானை பிளிறும்
- ஆந்தை அலறும்
- கழுதை கத்தும்
- காக்கை கரையும்
- கோழி கொக்கரிக்கும்
- புலி உறுமும்
- ஆடு கத்தும்
- எருது எக்காளமிடும்
- குரங்கு அலப்பும்

- பூனை சீறும்
- எலி கீச்சிடும்
- சேவல் கூவும்
- புறா குனுகும்
- வண்டு முரலும்

**வினைமரபுச்சொற்கள்:**

- அப்பம் தின்
- நெல் தூற்று
- நீர் பாய்ச்சு
- காய்கறி அரி
- களை பறி
- பாட்டுப் பாடு
- இலை பறி
- பழம் தின்
- மலர் கொய்
- சோறு உண்
- பழம் தின்
- கோலம் இடு
- தீ மூட்டு
- நீர் குடி
- தயிர் கடை
- படம் வரை
- பால் பருகு
- கவிதை இயற்று
- விளக்கை ஏற்று
- கூரை வேய்
- அம்பு எய்

- ஆடை நெய்
- உமி கருக்கு
- ஓவியம் புனை
- கூடை முடை
- சுவர் எழுப்பு
- செய்யுள் இயற்று
- தண்ணீர் குடி
- பூப் பறி
- மரம் வெட்டு
- மாத்திரை விழுங்கு
- முறுக்குத் தின்

**பயிற்சி: பொருத்துக:**

1. காகம் – கூவும்
2. குதிரை – கரையும்
3. சிங்கம் – கனைக்கும்
4. நரி – முழங்கும்
5. குயில் – ஊளையிடும்

**விடை:**

1. காகம் – கரையும்
2. குதிரை – கனைக்கும்
3. சிங்கம் – முழங்கும்
4. நரி – ஊளையிடும்
5. குயில் – கூவும்

**விலங்குகளின் வாழிடங்கள்:**

- ஆட்டுப்பட்டி
- குதிரைக்கொட்டில்
- கோழிப்பண்ணை
- மாட்டுத்தொழுவம்

- யானைக்கூடம்
- வாத்துப்பண்ணை
- மக்கள் கூட்டம்

**தாவர உறுப்புப் பெயர்கள்:**

- ஈச்ச ஓலை
- சோளத்தட்டை
- மாவிலை
- வேப்பந்தழை
- தாழை மடல்
- தென்னையோலை
- மூங்கில் இலை
- கமுகங்கூந்தல்
- பனையோலை
- பலாஇலை
- வாழைஇலை
- நெற்றாள்

**காய்களின் இளநிலை:**

- அவரைப்பிஞ்சு
- தென்னங்குரும்பை
- மாவடு
- வாழைக்கச்சல்
- முருங்கைப்பிஞ்சு
- வெள்ளரிப்பிஞ்சு

**செடி கொடி மரங்களின் தொகுப்பிடம்:**

- ஆலங்காடு
- கம்பங்கொல்லை
- பனந்தோப்பு

- சவுக்குத்தோப்பு
- சோளக்கொல்லை
- பலாத்தோப்பு
- தென்னந்தோப்பு
- தேயிலைத்தோட்டம்
- பூந்தோட்டம்

**பொருள்களின் தொகுப்பு:**

- ஆட்டுமந்தை
- திராட்சைக்குலை
- மாட்டுமந்தை
- கற்குவியல்
- வேலங்காடு
- யானைக்கூட்டம்
- சாவிக்கொத்து
- பசுநிரை
- வைக்கோற்போர்

**பயிற்ச்சி:**

**1. பொருத்தமான மரபுச்சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

அ) குமரன் பழம்_ _ _ _ _ (உண்டான், தின்றான்)

ஆ) காலையில் சேவல்_ _ _ _ _ (கூவியது, கத்தியது)

இ) ஆட்டு_ _ _ _ _ (கூட்டம், மந்தை) வருகிறது.

ஈ) எங்கள் ஊரில் வாழைத்_ _ _ _ _ (தோட்டம், தோப்பு) உள்ளது.

உ) குயில் (கூவியது, அகவியது)

**2. கீழுள்ள பெயர்களுக்கு உரிய இளமைப் பெயர்களை எழுதுக.**

அ) கீரி ___________

விடை: கீரிப்பிள்ளை

ஆ) மான் ___________

விடை: மான்கன்று

இ) சிங்கம் ____________

விடை: சிங்கக்குருளை

ஈ) பூனை ____________

விடை: பூனைக்குட்டி

உ) எருமை ____________

விடை: எருமைக்கன்று

**3. பொருத்துக:**

அ) மக்கள் – போர்

ஆ) வீரர் – கற்றை

இ) விறகு – கூட்டம்

ஈ) சுள்ளி – கட்டு

உ) வைக்கோல் – படை

**விடை:**

அ) மக்கள் – கூட்டம்

ஆ) வீரர் – படை

இ) விறகு – கட்டு

ஈ) சுள்ளி – கற்றை

உ) வைக்கோல் – போர்

**1. சொற்றொடர்களில் அமைந்துள்ள வழுக்களை அறிவோம்.**

**(எ.கா.)**

அரசன் வந்தது (திணைவழு) – அரசன் வந்தான்

கபிலன் பேசினாள் (பால்வழு) – கபிலன் பேசினான

குயில்கள் கூவியது (எண்வழு) – குயில்கள் கூவின

கமலா சிரித்தாய் (இடவழு) – கமலா சிரித்தாள்

வளவன் நேற்று வந்திருக்கிறான் (காலவழு) – வளவன் நேற்று வந்தான்

ஆந்தை கத்தியது (மரபுவழு) – ஆந்தை அலறியது

**பயிற்சி: கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள வழுக்களை நீக்கி எழுதுக.**

1. **புலவர் வந்தார்கள்.**

   **விடை: புலவர்கள் வந்தார்கள்**

2. **மயில் கூவ குயில் அகவியது.**

   **விடை: மயில் அகவ குயில் கூவியது**

3. **தாமரை படம் வரைந்தான்.**

   **விடை: தாமரை படம் வரைந்தாள்**

4. **யானைகள் வந்தது.**

   **விடை: யானைகள் வந்தன.**

5. **பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தது.**

   **விடை: பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தன.**

6. **வயலில் ஆட்டுக்கன்று மேய்கிறது.**

   **விடை: வயலில் ஆட்டுக்குட்டி மேய்கிறது.**

7. **பசு குட்டி போட்டது.**

   **விடை: பசு கன்று போட்டது.**

8. **மாட்டை இலாயத்தில் கட்டு.**

   **விடை: மாட்டை தொழுவத்தில் கட்டு.**

9. **வெற்றிலைத்தோப்புக்குச் சென்று வெற்றிலை பறித்து வா.**

   **விடை: வெற்றிலைத்தோட்டத்துக்குச் சென்று வெற்றிலை பறித்து வா.**

10. **யானை முழங்கும்.**

    **விடை: யானை பிளிறும்**

**2. பொருத்துக:**

1. சிங்கம் கனைத்தது – எண் வழு
2. கண்ணன் படித்தாள் – காலவழு
3. இன்று வருவான் – திணைவழு
4. கபிலன் பேசியது – மரபுவழு
5. பறவைகள் பறந்தது – பால்வழு

**விடை:**

1. **சிங்கம் கனைத்தது – மரபுவழு**
2. **கண்ணன் படித்தாள் – திணைவழு**
3. **இன்று வருவான் – பால்வழு**
4. **கபிலன் பேசியது –காலவழு**
5. **பறவைகள் பறந்தது – எண் வழு**

**மரபுச்சொற்கள்:**

பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் அவை ஒலிக்கும் முறைகளையும் இவ்வாறு கூற வேண்டுமென, முன்னோர் கூறிய மரபினைத் தொன்றுதொட்டுப் பின்பற்றி வருகின்றனர். **“நாய் கத்தியது”** எனக் கூறுகிறோம். அவ்வாறு கூறுதல் கூடாது. **“நாய் குரைத்தது”** என்பதே உரிய மரபுத்தொடர். இவ்வாறு வரும் சில மரபுகள் குறித்து இங்குக் காண்போம்.

**மரபுச் சொற்களை அறிக:**

பலாப்பிஞ்சு – பலாமூசு

வாழைப்பிஞ்சு –வாழைக் கச்சல்

முருங்கைப் பிஞ்சு –முருங்கைச் சரடு

அவரைப் பிஞ்சு – அவரைப்பொட்டு

மாம்பிஞ்சு – மாவடு

இளந்தேங்காய் – வழுக்கை

முற்றிய தேங்காய் – நெற்று.

**1. ‘ஆந்தை அலறும்’ என்பது..............**

அ) ஒலி மரபு

ஆ) வினை மரபு

இ) இளமைப்பெயர் மரபு

ஈ) இருப்பிடப் பெயர் மரபு

விடை: அ) ஒலி மரபு

**2. புலியின் இளமைப் பெயர்..............**

அ) புலிப்பறழ்

ஆ) புலிக்குட்டி

இ) புலிக்கன்று

ஈ) புலிப்பிள்ளை

விடை: அ) புலிப்பறழ்

**3. 'பூப்பறித்தாள்' என்பது**

அ) வினை மரபு

ஆ) பெயர் மரபு

இ) ஒலி மரபு

ஈ) இளமைப்பெயர் மரபு

விடை: அ) வினை மரபு

**4. ஒலி மரபுகளைப் பொருத்துக.**

1. சிங்கம் – கூவும
2. அணில் – அலப்பும்
3. மயில் – முழங்கும்
4. குயில் – கீச்சிடும்
5. குரங்கு – அகவும்

**விடை:**

1. சிங்கம் – முழங்கும்
2. அணில் – கீச்சிடும்
3. மயில் – அகவும்
4. குயில் – கூவும்
5. குரங்கு – அலப்பும்

**திணை மரபு:**

- ஒருவர் பேசும்போதும் எழுதும்போதும் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும்.
- பேச்சில் அல்லது எழுத்தில் பிழையிருப்பின் பொருள் மயக்கம் ஏற்படும். எனவே, சொற்களிலும் தொடர்களிலும் பிழைவராமல் காத்தல் வேண்டும்
- திணை, பால், எண், இடம், காலம், மரபு ஆகியன பிழையாக வாராமல் தொடரை எழுதுதல் வேண்டும்.

- எழுவாய் உயர்திணையாக இருந்தால் பயனிலையும் உயர்திணையாக இருத்தல் வேண்டும்.

  (எ.கா.) பொன்னன் தொடரோட்டத்தில் கலந்துகொண்டான்.

- எழுவாய் அஃறிணையாக இருந்தால் பயனிலையும் அஃறிணையாக இருத்தல் வேண்டும்.

  (எ.கா.) பசு புல் மேய்ந்தது.

- எழுவாய், ஐம்பால்களுள் எந்தப் பாலில் உள்ளதோ அதற்கேற்பப் பயனிலையைப் பெறல் வேண்டும்.

  (எ.கா.) அழகன் பாடினான்.

  வள்ளி ஆடினாள்.

- புலவர்கள் பாடல்களை இயற்றினார்கள். யானை பிளிறியது.

- மான்கள் ஓடின.

- எழுவாய் கள் விகுதி பெற்றால் பயனிலையும் கள் விகுதி பெறுதல் வேண்டும். எழுவாய் - அர் விகுதி பெற்றால் பயனிலையும் அர் விகுதி பெறுதல் வேண்டும்.

  (எ.கா.) மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுதினார்கள். மூவர் தேவாரத்தைப் பாடினர்.

- எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலையும் ஒருமையாக இருத்தல் வேண்டும்.

- எழுவாய் பன்மையாக இருந்தால் பயனிலையும் பன்மையாக இருத்தல் வேண்டும்.

  (எ.கா.) என் புத்தகம் இதுவன்று. என் புத்தகங்கள் இவையல்ல.

- தொடரில் காலவழு ஏற்படாமல் காத்தல் வேண்டும்.

  (எ.கா.) தலைவர் நாளை மதுரையில் பேசுவார். நேற்று மழை பொழிந்தது.

**திணை வழுநிலை:**

- சொற்றொடர்களில் ஒரு திணைக்கு உரிய பெயரைப் பயன்படுத்துகிற போது அத்திணைக்கு உரிய வினையைக் கொண்டுதான் முடிக்க வேண்டும். அவ்வாறு முடிக்காவிட்டால் அது திணை வழுவாகும்.

  எ.டு - அப்பா வந்தது.

- இச்சொற்றொடரில் ‘அப்பா' என்னும் பெயர் உயர்திணைக்கு உரியது. இச்சொல் எழுவாயாக வந்துள்ளது. ‘வந்தது' என்பது வினைப் பயனிலை. இஃது அஃறிணைச் சொல், அப்பா என்னும் உயர்திணை எழுவாய்க்கு,

முடிக்கும் சொல்லாக ‘வந்தது' இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயர்திணை எழுவாய்க்கு அஃறிணையும், அஃறிணை எழுவாய்க்கு உயர்திணையும் பயனிலையாக வருவது வழுவாகும்.

**திணை வழாநிலை:**

- ஒரு திணைக்கு உரியதாக வரும் பெயருக்கு ஏற்றாற் போல அதன் முடிக்கும் சொல்லாக வரும் வினையும் அத்திணைக்கு உரியதாக அமைவது திணை வழாநிலையாகும்.

  **எ.டு**:

  - கண்ணகி பாடினாள்
  - மாடு ஓடியது

- முதல் தொடரில் ‘கண்ணகி' என்னும் உயர்திணைப்பெயர், ‘பாடினாள்' என்னும் உயர்திணைக்குரிய வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.
- இரண்டாவது தொடரில் ‘மாடு' என்னும் அஃறிணைப் பெயர் ‘ஓடியது' என்னும் அஃறிணை வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.
- இவ்விருதொடர்களும் இலக்கண முறைக்கு ஏற்றதாக உள்ளமையால் வழாநிலைத் தொடர்களாகும்.
- இன்றைய தமிழில் யார்? எது? போன்ற வினாச்சொற்களைப் பயனிலையாக அமைத்துத் திணை வேறுபாடு அறியப்படுகிறது.
    - அங்கே நடப்பது யார்?
    - அங்கே நடப்பது எது?
- மேற்கண்ட தொடர்கள் பொருட்குறிப்பின் அடிப்படையில் யார் என்ற பயனிலை உயர்திணையையும் எது என்ற பயனிலை அஃறிணையையும் உணர்த்துகின்றன.
- குழந்தை, கதிரவன் போன்றவை இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள். இப்பெயர்கள் எழுவாயாக அமையும்போது அவற்றின் வினைமுடிபு இருதிணை பெற்றும் வருகின்றது.
    - குழந்தை சிரித்தான் - குழந்தை சிரித்தது
    - கதிரவன் உதித்தான் - கதிரவன் உதித்தது
- பேச்சு வழக்கில் அஃறிணை முடிபைப் பெற்று வருவதே பெருவழக்காக உள்ளது.

**திணை வழுவமைதி:**

உயர்திணைப் பெயரை அஃறிணைப் பெயர் சார்ந்து வரும் பொழுதும், உயர்திணைப் பெயரோடு அஃறிணைப் பெயரும் எழுவாயாக வரும் பொழுதும்,

முடிக்கும் சொல்லை எத்திணையில் அமைப்பது என்னும் சிக்கல் எழுகிறது. இங்கெல்லாம் சிறப்பு, மிகுதி, இழிவு என்னும் காரணங்களால் ஏதேனும் ஒரு திணையின் முடிபை அத்தொடர்களுக்கு அளிப்பதால் இவை திணை வழுவமைதி ஆகின்றன.

**எ.டு:**

- தம்பி பொன் பெரியது
- தம்பி நாடு பெரியது
- தம்பி வாழ்நாள் பெரியது
- தம்பி மூக்குக் கூரியது
- தம்பி நன்மை பெரியது
- தம்பி நடிப்புப் பெரியது

என வருதலே திணை வழாநிலையாகும். ஆனால் இதற்கு மாறாக இலக்கியங்களிலும் மக்கள் வழக்கிலும் கீழே குறிப்பிட்டவாறு காணப்படுவதால் வழுவமைதியாயிற்று.

**எ.டு:**

- தம்பி பொன் பெரியவன்
- தம்பி நாடு பெரியவன்
- தம்பி வாழ்நாள் பெரியவன்
- தம்பி மூக்குக் கூரியன்
- தம்பி நன்மை பெரியவன்
- தம்பி நடிப்புப் பெரியவன்

இந்த ஆறு தொடர்களில் 'தம்பி' என்னும் உயர்திணைப் பெயரைத் தொடர்ந்து 'பொன், நாடு, வாழ்நாள், மூக்கு, நன்மை, நடிப்பு' என்னும் பொருள் முதலிய ஆறு அஃறிணைப்பெயர்கள் சார்ந்து வந்தமையால், அத்தொடர்கள், அவ்வஃறிணைப் பெயர்களுக்கு உரிய முடிக்கும் சொல் பெறாமல் தம்பி என்னும் உயர்திணைக்கு உரிய முடிக்கும் சொல் பெற்று முடிந்தன. இவ்வாறு வருவது திணை வழுவமைதி ஆகும்.

- இவ்வாறு உயர்திணைக்கு உரிய சொற்களைத் தொடர்ந்து அஃறிணையின் பொருட் பெயர் முதலிய ஆறு பெயர்களும் சார்ந்து வருமானால் உயர்திணை முடிக்கும் சொல்லாகும் என இத்திணை வழுவமைதி உணர்த்துகிறது.

- உயர்திணைப் பெயரோடு அஃறிணைப் பெயரும் எழுவாயாக வரும் பொழுது வினைமுடிபை எத்திணையில் அமைப்பது என்னும் சிக்கல் ஏற்படுகிறது.

  எ.டு: முகிலனும் நாயும் விளையாடினர்.

- இந்தத் தொடரில் ‘முகிலன்’ உயர்திணைப் பெயர் ; ‘நாய்’ அஃறிணைப் பெயர். இவ்விரண்டு பெயர்களும் எழுவாயாக வந்துள்ளன. எழுவாய்களின் செயலான ‘விளையாடுதல்’ என்பதை உயர்திணை வினைமுற்றில் (விளையாடினர்) தருவதா? அன்றி அஃறிணை வினைமுற்றில் (விளையாடின) தருவதா? என ஐயம் ஏற்படுகிறது. இந்நிலையில் சிறப்பு என்னும் காரணத்தால், உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணையில், உயர்திணை சிறப்புடையது ஆதலின், விளையாடினர் என்ற உயர்திணைப் பலர்பால் வினைமுற்று கொடுக்கப்பட்டது.

- சிறப்பின் காரணமாக அன்றி மிகுதி, இழிவு காரணமாகவும் முடிக்கும் சொல்லின் திணை மாறிவரும்.

  **எ.டு**:

  - யானை, குதிரை, தேர், காலாள் படை வந்தன – மிகுதி
  - முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா - இழிவு

- முதல் தொடரில் காலாள் என உயர்திணை இடம் பெறினும் ஏனைய படைகள் மூன்று அஃறிணையில் இடம் பெறுவதால் மிகுதி கருதி அஃறிணை முடிவு பெற்றது.

- இரண்டாம் தொடரில் மூர்க்கன் என்னும் உயர்திணை வரினும் இழிவு கருதி அஃறிணை முடிவு பெற்றது.

**கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக**:

(வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்)

| **உயர்திணை** | **அஃறிணை** |
|---|---|
| முகிலன் | வயல் |
| கயல்விழி | குதிரை |
| தலைவி | கடல் |
| ஆசிரியர் | புத்தகம் |
| சுரதா | மரம் |

**உரிய வினைமுற்றுகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புக:**

| | நட | உண் | உறங்கு |
|---|---|---|---|
| ஆண்பால் | நடக்கிறான் | உண்கிறான் | உறங்கினான் |
| பெண்பால் | நடக்கிறாள் | உண்கிறாள் | உறங்கினாள் |

| | | | |
|---|---|---|---|
| பலர் பால் | நடக்கிறார் | உண்டார் | உறங்கினார் |
| ஒன்றன் பால் | நடந்தது | உண்டது | உறங்கியது |
| பலவின் பால் | நடந்தன | உண்டன | உறங்கின |
| தன்மை | நடந்தேன் | உண்கிறேன் | உறங்கினேன் |
| முன்னிலை | நடந்தீர் | உண்டீர் | உறங்கினீர் |
| படர்க்கை | அவன் நடந்தான் | அவன் உண்பான் | அவள் உறங்கினாள் |
| இறந்த காலம் | நடந்தான் | உண்டான் | உறங்கினான் |
| நிகழ் காலம் | நடக்கிறான் | உண்கிறான் | உறங்குகிறான் |
| எதிர் காலம் | நடப்பான் | உண்பான் | உறங்குவான் |

**பால் மரபு:**

**பால் பாகுபாடு:**

- தமிழில் பால்பகுப்பு இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது. தன்மை, முன்னிலை இடத்தைத் தவிர, தமிழில் உள்ள பெயர்கள், படர்க்கை இடத்தில் வரும். பயனிலை விகுதிகளான ஆன். ஆள், ஆர், அது, அன் முதலியவை பால்பகுப்பைக் காட்டுகின்றன.
- பழந்தமிழில் ஐம்பால்களுள் பலர்பால்சொல் பன்மையிலும் உயர்வு கருதிச் சிலவேளைகளில் ஒருமையிலும் வந்துள்ளன.
    - மாணவர் வந்தனர்(பன்மை) - ஆசிரியர் வந்தார் (ஒருமை)
- இக்காலத் தமிழில் பலர்பாலை உணர்த்தும் சொல் பன்மைப் பொருளை உணர்த்தாமல் ஒருமைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது. பன்மைப் பொருள் உணர்த்துவதற்குக் கள் என்னும் விகுதி உதவுகிறது
    - அவர் வந்தார் (ஒருமை)
    - அவர்கள் வந்தார்கள் (பன்மை)
- தமிழில் உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரிய பொதுப்பெயர்கள் உண்டு. இப்பெயர்கள் தொடர்களில் அமையும்போது வினைமுற்றைப் பொறுத்தே பால் அறியப்படுகிறது.
    - தங்கமணி பாடினான்
    - தங்கமணி பாடினாள்
- பால் காட்டும் விகுதிகள் இன்றியும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் தத்தம் பால் உணர்த்துகின்றன.
    - ஆண் - பெண்;
    - தம்பி-தங்கை;
    - அப்பா-அம்மா;
    - தந்தை-தாய்.

- அஃறிணை எழுவாயில் ஆண் பெண் பகுப்புமுறை மரபில் இருந்தாலும் வினைமுற்றில் அவற்றை வேறுபடுத்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லை. எனவே ஒருமை, பன்மை அடிப்படையிலேயே ஒன்றன்பால் பலவின்பால் என்பன அறியப்படுகின்றன.
    - காளை உழுதது.
    - பசு பால் தந்தது.
- மேற்கண்ட தொடர்களில் காளை ஆண்பாலாகவும் பசு பெண்பாலாகவும் உள்ளன. ஆனால் வினைமுற்று, பால்பாகுபாட்டிற்குரிய விகுதிகளைப் பெறாமல் ஒன்றன்பால் விகுதி பெற்று முடிந்துள்ளது.
- தற்காலத்தில் அஃறிணை எழுவாய் மாற்றம் அடைந்துள்ளது. மாட்டினத்தில் பெண்பாலைக் குறிக்க பசுமாடு எனவும் ஆண்பாலைக் குறிக்க காளைமாடு (எருது) எனவும் சொற்கள் வழங்கப்படுகின்றன. பிற விலங்குகளைக் குறிக்கையில் ஆண்குரங்கு. பெண்குரங்கு எனவும் எழுவாய்ப் பொதுப்பெயருடன் ஆண் பெண் என்னும் பால்பாகுபாட்டுப் பெயர்கள் முன்சேர்த்து வழங்கப்படுகின்றன.

**உயிரினங்களின் இளமைப் பண்பு பற்றிய மரபுப்பெயர்கள்:**

**ஆண்பால் மரபுப் பெயர்கள்:**

எருதும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்

சேவும் சேவலும் இரலையும் கலையும்

மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்

போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்

யாத்த ஆண்பாற் பெயரென மொழிப (546)

நூற்பாவின் பொருள்: **எருது**, **ஏற்றை**, **ஒருத்தல்**, **களிறு**, **சே**, **சேவல்**, **இரலை**, **கலை**, **மோத்தை**, **தகர்**, **உதள்**, **அப்பர்**, **போத்து**, **கண்டி**, **கடுவன்** என்பனவும் இத்துடன் **ஆண்**, **விடை** என்று வருவனவும் ஆண்பால் பற்றிய மரபுப் பெயர்கள்.

இதில் கூறப்பட்ட "போத்து" என்பது இளமைப் பெயராயினும் ஆண்பாற் பெயருக்குச் சிறப்புடன் வரும். மக்களுக்குரிய ஆண் பெயர் பாலறியவந்த உயர்திணைப் பெயர் எனச் சொல்லதிகாரத்துள் கூறப்பட்டது.

**பெண்பால் மரபுப் பெயர்கள்:**

பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்

மூடும் நாகுங் கடமையும் அளகும்

மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்

அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே (547)

நூற்பாவின் பொருள்: **பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி** என்ற பெயர்கள் பெண்மை பற்றிய மரபுப்பெயர்கள் ஆகும். அந்தஞ்சான்ற என்பது முடி பமைந்தன இவையெனப்பட்டது.

ஆ என்பது பெண் பெயர். ஆனேறென்பது அவினுள் (பசு) ஏறெனப்படுதலின் ஆ வென்பது ஆண்பாற்கும் வருகிறது.

**பறவையினத்தின் இளமைப் பெயர்கள்:**

அவற்றுள்: **பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை** (548)

நூற்பாவின் பொருள்: முதல் நூற்பாவில் பார்ப்பு முதலாகக் குழவி ஈறாகச் சொல்லப்பட்ட இளமைப் பெயர்களுள், பறவையினத்தின் இளமைப் பெயர்கள், பார்ப்பும் பிள்ளையும் ஆகும்.

**"மேற்கவட்டி ரந்த பார்ப்பினங்களுக்கு" (அகம்.31):** (மழை பெய்யாத அந்தக் கோடைக் காலத்தில் யாமரத்தின் உயர்ந்த கிளைகளில் இருந்த தன் குஞ்சுகளுக்கு (பார்ப்பினங்களுக்கு) கழுகினம், வேடரின் வில்லால் வீழ்த்தப்பட்ட விலங்கினத்தின் குருதிபடிந்த கண்களை உணவாகக் கொண்டு கொடுக்கும்).

**தவழ்பவைக்கும் உரியன**:

**'தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன**" (549)

- நூற்பாவின் பொருள்: பறப்பனவற்றிற்குச் சொல்லப்பட்ட பார்ப்பு, பிள்ளை என்ற இளமைப் பெயர்கள், ஆமை, உடும்பு, ஓந்தி (ஓணானுள் ஒருவகை), முதலை முதலான தவழும் உயிரினத்திற்கும் உரிய இளமைப் பெயர்களாக வரும். ஆமையும் முதலையும் நிலத்தில் வரும்போது தவழ்வன எனப்படும்.
- நூற்பாவில் "தாமும்: என்றதனால் ஊர்வன நடப்பனவற்றிற்கும் சிறுபான்மை உரியவாகும்.
- "பிள்ளை பாம்பு'-ஊர்வனமேல் வந்தது
- 'பிள்ளை வெருகு', காட்டுப்பூனைகளாகிய நடப்பனவற்றிற்கு வந்தது.
- 'மூங்காப் பிள்ளை" - கீரிக்கு வந்தது.

**ஆண்- பெண் மரபுப் பெயர்கள்:**

| பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|
| 1. யானை | களிறு | பிடி |
| 2. கோழி | சேவல் | பேடு |
| 3. பூனை | கடுவன் | பெட்டை |
| 4. மான் | கலை | பிணை |

| | | |
|---|---|---|
| 5. மயில் | போத்து | அளகு |
| 6. நாய் | கடுவன் | பெட்டை |
| 7. நண்டு | அலவன் | பெடை |
| 8. குரங்கு | கடுவன் | மந்தி |
| 9. ஆடு | கடா | மறி |
| 10. மாடு | காளை, எருது, ஏறு | பசு, நகு |
| 11. குதிரை | குண்டு | பெட்டை, வடவை |
| 12. புலி | போத்து | பிணை |
| 13. நரி | ஓரி | பாட்டி |
| 14. பன்றி | ஒருத்தல் | பிணை |
| 15. சிங்கம் | ஏறு | பெட்டை |
| 16. மரை, கரடி | ஒருத்தல் | பெட்டை |

**கால மரபு:**

காலம் வகைகள் - மூன்று காலம்

1. இறந்தகாலம்,
2. நிகழ்காலம்,
3. எதிர்காலம் என மூன்று வகைப்படும்.

| **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|
| பேசும் நேரத்துக்கு முன்னர் நிகழ்ந்தவற்றைக் குறிப்பது | அந்நேரத்தில் நடந்துகொண்டு இருப்பவற்றைக் குறிப்பது | பின்னர் நிகழ இருப்பவற்றைக் குறிப்பது |
| **செய்தான்** | **செய்கின்றான்** | **செய்வான்** |
| செய் + த் + ஆன் ----> செய்தான் | செய் + கின்று + ஆன் ----> செய்கின்றான் | செய் + வ் + ஆன் ----> செய்வான் |
| **இடைநிலைகள்** - "த்" (த், ட், ற், த்த்), "ந்த்" (ந்த், ன்ற், ண்ட்), "இன்" (ய், ன்) | **இடைநிலைகள்**- "கின்று", "கிறு" | **இடைநிலைகள்** - "வ்", "ப்ப்", "ப்" |

**காலப் பிழையும் திருத்தமும்:**

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| நான் நேற்று திரைப்படத்திற்குச் செல்கிறேன். | நான் நேற்று திரைப்படத்திற்குச் சென்றேன் |
| அவன் நாளைக்கு வந்தான். | அவன் நாளைக்கு வருவான் |

| | |
|---|---|
| இந்தப் புத்தகத்தை இரண்டு ஆண்டுகளுக்குமுன் நான் வாங்குவேன். | இந்தப் புத்தகத்தை இரண்டு ஆண்டுகளுக்குமுன் நான் வாங்கினேன் |
| நாளைக்கு நான் ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன். | நாளைக்கு நான் ஊருக்குப்போய்ச் சேர்வேன். |
| நேற்று பால் பொங்குகிறது | நேற்று பால் பொங்கியது. |

**வேர்சொல்லைக் கொண்டு காலத்தைக் குறிக்கும் உரிய வினைச்சொல்லை எழுதுக:**

வேர்சொல்லைக் கொண்டு காலத்தைக் குறிக்கும் உரிய வினைச்சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

'பார்' என்னும் வேர்சொல்லைக் கொண்டு வினைச்சொல்லை காலத்திற்கு ஏற்றபடி பின்வருமாறு மாறுகிறது.

1. பார்த்தேன் (இறந்தகாலம்)
2. பார்க்கிறேன் (நிகழ்காலம்)
3. பார்ப்பேன் (எதிர்காலம்)

**பின்வரும் சொற்றொடர்களுக்கு எதிரே அவை எந்தக் காலத்தைக் குறிக்கின்றன என எழுதுக:**

பாத்திமா நன்றாகத் தேர்வு எழுதினாள் - இறந்தகாலம்

சிங்காரம் கடைக்குப் போக மறுத்தான் - இறந்தகாலம்

பக்கத்தில் இருப்பவனைப் பார்த்துப் பார்த்து எழுதுகிறான் - நிகழ்காலம்

ஆசிரியர் வந்ததும் கேள்வி கேட்பார் - எதிர்காலம்

**காலம், இடம், பால், திணை, எண் வேறுபாடு:**

| **வினைசொல்** | **பால்** | **எண்** | **திணை** | **இடம்** | **காலம்** |
|---|---|---|---|---|---|
| வருகின்றான் | ஆண் | ஒருமை | உயர்திணை | படர்க்கை | நிகழ்காலம் |
| வருகின்றாள் | பெண் | ஒருமை | உயர்திணை | படர்க்கை | நிகழ்காலம் |
| வருகின்றது | ஒன்றன்பால் | ஒருமை | அஃறிணை | படர்க்கை | நிகழ்காலம் |
| வந்தான் | ஆண் | ஒருமை | உயர்திணை | படர்க்கை | இறந்தகாலம் |
| வந்தாள் | பெண் | ஒருமை | உயர்திணை | படர்க்கை | இறந்தகாலம் |
| வந்தது | ஒன்றன்பால் | ஒருமை | அஃறிணை | படர்க்கை | இறந்தகாலம் |
| வருகின்றார்கள் | பலர்பால் | பன்மை | உயர்திணை | படர்க்கை | நிகழ்காலம் |
| வந்தார்கள் | பலர்பால் | பன்மை | உயர்திணை | படர்க்கை | இறந்தகாலம் |
| வருவார்கள் | பலர்பால் | பன்மை | உயர்திணை | படர்க்கை | எதிர்காலம் |
| வந்தேன் | ஆண் | ஒருமை | உயர்திணை | தன்மை | இறந்தகாலம் |
| வருவோம் | பலர்பால் | பன்மை | உயர்திணை | தன்மை | எதிர்காலம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வந்தன | பலவின்பால் | பன்மை | அஃறிணை | படர்க்கை | இறந்தகாலம் |

**ஒருமை, பன்மை அடிப்படையில் காலம்:**

| | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|---|
| நான் | வந்தேன் | வருகிறேன் | வருவேன் |
| நாங்கள் | வந்தோம் | வருகிறோம் | வருவோம் |
| நீ | வந்தாய் | வருகிறாய் | வருவாய் |
| நீங்கள் | வந்தீர்கள் | வருகிறீர்கள் | வருவீர்கள் |
| அவன் | வந்தான் | வருகிறான் | வருவான் |
| அவள் | வந்தாள் | வருகிறாள் | வருவாள் |
| அவர் | வந்தார் | வருகிறார் | வருவார் |
| அவர்கள் | வந்தார்கள் | வருகிறார்கள் | வருவார்கள் |
| அது | வந்தத | வருகிறது | வரும் |
| அவை | வந்தன | வருகின்றன | வரும் |

**வேர்ச்சொல் அடிப்படையில் காலம்:**

| **வேர்ச்சொல்** | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|---|
| நட | நடந்தாள் | நடக்கிறாள் | நடப்பாள் |
| எழுது | எழுதினாள் | எழுதுகிறாள் | எழுதுவாள் |
| ஓடு | ஓடினாள் | ஓடுகிறாள் | ஓடுவாள் |
| சிரி | சிரித்தாள் | சிரிக்கிறாள் | சிரிப்பாள் |
| பிடி | பிடித்தாள் | பிடிக்கிறாள் | பிடிப்பாள் |
| இறங்கு | இறங்கினாள் | இறங்குகிறாள் | இறங்குவாள் |
| தா | தந்தான் | தருகிறான் | தருவான் |
| காண் | கண்டான் | காண்கிறான் | காண்பான் |
| பெறு | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| பாடு | பாடினாள் | பாடுகிறாள் | பாடுவாள் |
| கொடு | கொடுத்தார் | கொடுக்கிறார் | கொடுப்பார் |
| நீந்து | நீந்தினாள் | நீந்துகிறாள் | நீந்துவாள் |

**பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக:**

1. **அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.**

அமுதன் நேற்று விடுக்கு வந்தான்

2. **கண்மணி நாளை பாடம் படித்தாள்.**

கண்மணி நாளை பாடம் படிப்பாள்

3. **மாடுகள் இப்பொழுது புல் மேயும்.**

மாடுகள் இப்பொழுது புல் மேய்கிறது

4. **ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.**

ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்துவார்

5. **நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் செல்கிறோம்.**

நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் சென்றோம்.

**கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| நேற்று | எங்கள் ஊரில் மழை | பெய்கிறது |
| இன்று | | பெய்யும் |
| நாளை | | பெய்தது |

நேற்று எங்கள் ஊரில் மழை பெய்தது (இறந்தகாலம்)

இன்று எங்கள் ஊரில் மழை பெய்கிறது (நிகழ்காலம்)

நாளை எங்கள் ஊரில் மழை பெய்யும் (எதிர்காலம்)

**இது போன்று மூன்று காலங்களையும் காட்டும் சொற்றொடர்களை அமைக்க.**

1. நேற்று நான் ஊருக்கு போனேன்(இறந்தகாலம்)

இன்று நான் ஊருக்கு போகிறேன் (நிகழ்காலம்)

நாளை நான் ஊருக்கு போவேன் (எதிர்காலம்)

2. நேற்று வயலில் ஆடு மேய்ந்தது(இறந்தகாலம்)

இன்று வயலில் ஆடு மேய்கிறது (நிகழ்காலம்)

நாளை வயலில் ஆடு மேயும் (எதிர்காலம்)

3. நேற்று என் அப்பா வந்தார் (இறந்தகாலம்)

இன்று என் அப்பா வருகிறார் (நிகழ்காலம்)

நாளை என் அப்பா வருவார். (எதிர்காலம்)

**கீழ்க்காணும் எடுத்துக்காட்டைப் போல் எழுதுக:**

எ.கா: நான் உணவு __________ (உண்)

- நான் உணவு உண்டேன் (இறந்தகாலம்)
- நான் உணவு உண்கிறேன் (நிகழ்காலம்)
- நான் உணவு உண்பேன் (எதிர்காலம்)

1. இளவரசி பூ __________ (தொடு)

இளவரசி பூ தொடுத்தாள் (இறந்தகாலம்)

இளவரசி பூ தொடுக்கிறாள் (நிகழ்காலம்)

இளவரசி பூ தொடுப்பாள் (எதிர்காலம்)

2. ஆடு புல் __________ (மேய்)

ஆடு புல் மேய்ந்தது (இறந்தகாலம்)

ஆடு புல் மேய்கிறது (நிகழ்காலம்)

ஆடு புல் மேயும் (எதிர்காலம்)

3. நாங்கள் படம் __________ (வரை)

நாங்கள் படம் வரைந்தோம் (இறந்தகாலம்)

நாங்கள் படம் வரைகிறோம் (நிகழ்காலம்)

நாங்கள் படம் வரைவோம் (எதிர்காலம்)

4. கதிர் போட்டியில் __________ (வெல்)

கதிர் போட்டியில் வென்றான் (இறந்தகாலம்)

கதிர் போட்டியில் வெல்கிறான் (நிகழ்காலம்)

கதிர் போட்டியில் வெல்வான் (எதிர்காலம்)

5. மயில்கள் நடனம் __________ (ஆடு)

மயில்கள் நடனம் ஆடின (இறந்தகாலம்)

மயில்கள் நடனம் ஆடுகின்றன (நிகழ்காலம்)

மயில்கள் நடனம் ஆடும் (எதிர்காலம்)

**அட்டவணையில் விடுபட்ட இடங்களை நிரப்புக:**

| **வினைச்சொல்** | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|---|
| செய் | செய்தான் | செய்கின்றான் | செய்வான் |
| பற | பறந்தது | பறக்கின்றது | பறக்கும் |
| படி | படித்தான் | படிக்கின்றான் | படிப்பான் |
| கேள் | கேட்டது | கேட்கின்றது | கேட்கும் |
| சொல் | சொன்னாள் | சொல்கிறாள் | சொல்வா |

# நிறுத்தக் குறியீடு

**அறிமுகம்:**

நாம் பேசும்போது நமது உணர்வுகளைக் கூரல் மூலம் மற்றும் ஏற்ற இறக்கங்கள் மூலம் காட்டுவோம். எழுத்தில் நம் கருத்துகளை வெளிப்படுத்தும்போது உணர்வுகளை வெளிக்காட்ட நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்துகிறோம்.

**அமைதிக்கான அளவு:**

- படிக்கும்போது எந்த இடத்தில் எந்த அளவு நிறுத்த வேண்டும் என்பதை உணர்த்த குறியீடுகள் இடப்படுகின்றன. இவற்றையே நிறுத்தக் குறியீடுகள் என்கிறோம். ஒரு தொடர் எவ்வாறு அமைக்கப்படுகிறது, அதை நாம் எவ்வாறு படிக்க வேண்டும் என்பதைக் காட்டவே நிறுத்தக் குறியீடுகள் இடுகிறோம்.

**பழங்காலத்தில் நிறுத்தக் குறியீடுகள்:**

- பழங்காலத்தில் தமிழ்மொழியில் நிறுத்தக் குறியீடுகள் இல்லை. அக்காலத்தில் எழுதுவதற்கு ஓலைச் சுவடிகளைப் பயன்படுத்தினர் என்பதும் அதற்கு ஒரு காரணம். புள்ளி, கோடு ஆகியவற்றை இடும்போது, ஓலைச் சுவடிகள் கிழிந்துவிடும். அதுபோலவே கல்வெட்டுகளில் எழுதும்போதும் சுழிகள், கோடுகள் போடுவது கடினம்.

**நிறுத்தக் குறியீடுகளின் பணிகளைச் செய்தவை:**

நிறுத்தக் குறியீடுகளின் பணிகளை அக்காலங்களில் செய்தது யார்? வினைச்சொல் தொடரின் இறுதியில் எழுதப்பட்டது. இது முற்றுப் புள்ளியின் வேலையைச் செய்தது. ஏகார, ஓகார உம்மைகள் காற்புள்ளி, அரைப்புள்ளி ஆகியவற்றின் வேலைகளைச் செய்தன. இதுபோல, எனவே, ஆகவே ஆகிய சொற்கள் விட்டிசைப்பினைத் தருவதோடு முந்தைய தொடரோடு தொடர்புடையது எனக் காட்டுகிறது. ஆ, ஓ, ஆகியவை பெயர் வினைச்சொற்களின் இறுதியில் நின்று கேள்விக்குறியின் பணியைச் செய்தன.

**நிறுத்தக் குறியீடுகளின் தோற்றம்:**

- அச்சுக்கலை இந்தியாவில் தோன்றிய பிறகு தமிழ்மொழியில் நிறுத்தக் குறியீடுகளின் பயன்பாடு மிகுந்தது. புத்தகங்கள் தமிழில் அச்சிடப்பட ஆரம்பித்த பின்னர், பல நிறுத்தக் குறிகள் தமிழில் கையாளப்பட்டன.

**புள்ளிகள்:**

நிறுத்தக் குறியீடுகளில் புள்ளிகள் மிகவும் முக்கியம். வாசிக்கும்போது ஒலிப்பு வேறுபாடுகளைக் காட்டவும், கூறும் செய்தியின் பொருளில் குழப்பம் வராமல் இருக்கவும், படிப்பவரின் கவனத்தைத் தேவைப்படும் இடங்களுக்குக் கொண்டுசெல்லவும் நிறுத்தக் குறிகள் பயன்படுகின்றன.

இவற்றில் புள்ளிகள் முதலிடம் பெறுகின்றன. அவை,

1. கால் புள்ளி
2. அரைப் புள்ளி
3. முக்காற் புள்ளி
4. முற்றுப் புள்ளி
5. முப்புள்ளி

இவற்றோடு இன்னும் சில குறியீடுகளும் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

6. கேள்விக்குறி
7. உணர்ச்சிக்குறி
8. இரட்டை மேற்கோள் கூறி
9. ஒற்றை மேற்கோள் குறி
10. தனி மேற்கோள் குறி
11. மேற்படிக்குறி
12. பிறை அடைப்புக் குறி
13. சதுர அடைப்புக்குறி
14. இணைப்புக்குறி
15. சாய்கோடு

ஆகியவை ஆகும். இவற்றின் பயன்பாடுகளை ஒன்றன்பின் ஒன்றாகக் காணலாம்.

**கால் புள்ளி: (உறுப்பிசைக் குறி) (,)**

இக்குறி இடப்படும் இடங்களில் ஒரு மாத்திரை அளவு நிறுத்தி வாசிக்க வேண்டும். இவை இடப்படும் இடங்கள் பல உள்ளன.

ஒரு பெயர்ச்சொல்லோடு பல வினைச் சொற்கள் வரும் இடங்களில் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **நான் இராமனை வீட்டில் சென்று பார்த்தேன், பேசினேன், வந்தேன்.**

அது போலவே பல பெயர்ச்சொற்கள் வரும் இடங்களிலும் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **கடைக்குச் சென்று மா, பலா, வாழை, கொய்யா ஆகிய பழங்கள் வாங்கினேன்.**

ஒரு பெயர்ச்சொல்லை விவரித்துச் சொல்லும் பல தொடர்களுக்கு இடையில் கால்புள்ளி வரல் வேண்டும்.

- **அழகான, நறுமணமிக்க, பல இதழ்கள் கொண்ட தாமரை மலர்ந்தது.**

இத் தொடரில் ஒரே வினைச்சொல் இரண்டு முறை வரும்போது கால்புள்ளி இடல் வேண்டும்.

- **நீ வருவாய், வருவாய் எனக் காத்திருந்தேன்.**

இரு தொடரை இணைக்கும் இணைப்புச் சொற்களை அடுத்தும் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **நேற்று மழை பெய்தது. ஆனால், குளம் நிறையவில்லை.**

சொல்லும் கருத்தில் உள்ள உணர்ச்சி வெளிப்படவும், அழுத்தம் ஏற்படவும் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **தெருவெங்கும் கொட்டிக் கிடந்தன, மலர்கள்.**

இல்லையா, அல்லவா போன்ற சொற்கள் வரும் தொடர்களில் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **நேற்று பலமாகக் காற்று வீசியது, இல்லையா?**

வினாக்களில் அடுக்கி வரும் சொற்களுக்கு இடையிலும், விடையில் வரும் வினாச் சொல்லை அடுத்தும் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **இனிப்பா, காரமா என்ன வேண்டும்?**
- **இதுவா, பேனா.**

ஏவல் வினைகள் வரும் தொடர்களில் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **அவனைத் தடுக்காதே, விடு.**

உணர்ச்சி வாக்கியங்களில் உணர்ச்சிச் சொல்லைத் தொடர்ந்து கால்புள்ளி இடல் வேண்டும்.

- **ஐயோ, வலிக்கிறதே!**

ஆமாம் என்ற சொல் தொடரில் வரும்போது கால்புள்ளி இடல் வேண்டும்.

- **ஆமாம், அவர் நேற்று வந்தார்.**

ஒருவரை விளித்து எழுதும்போது, கால்புள்ளி இடல் வேண்டும்.

- **தம்பி, இங்கே வா**

கடிதங்களில் விளிக்கும்போதும், முடிக்கும் சொல்லிலும் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **மதிப்பிற்குரிய ஐயா,**
- **இப்படிக்கு,**

முகவரியைப் படுக்கை வரிசையில் எழுதுகையில் கால்புள்ளி இடல் வேண்டும்.

- **கார்த்திகேயன், 12, மேற்கு வீதி, மதுரை.**

இதே முகவரியை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதும்போது கால்புள்ளி இடக்கூடாது.

- **கார்த்திகேயன்**
- **12, மேற்கு வீதி**
- **மதுரை**

பட்டங்களை எழுதும்போது கால்புள்ளி இடல் வேண்டும்.

- **எம்.ஏ, டி.லிட்**

மாதம் தேதிக்குப் பின் ஆண்டு எழுதும்போது கால்புள்ளி இடல் வேண்டும். தேதி மாதம் ஆண்டு எழுதும்போது கால்புள்ளி இடக் கூடாது.

- **நவம்பர் 14,1960**
- **14 நவம்பர் 1960**

**அரைப்புள்ளி: (விளக்கிசைக் குறி) (;)**

கால் புள்ளியைவிட அதிக நேரம் இடைவெளி விட்டு வாசிக்க வேண்டும். இரண்டு மாத்திரை அளவு இடைவெளி தரவேண்டும். இதுவும் பல இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. ஒரே கருத்தைப் பல முற்றுத் தொடர்களால் கூறும்போது அரைப்புள்ளி இடல் வேண்டும்.

- **தமிழ் இலக்கியங்கள் தொன்மையானவை; பொருள் நிறைந்தவை; அறக் கருத்துகளைக் கூறுபவை.**

காரணம், விளைவு இரண்டையும் கூறும்போது அரைப்புள்ளி இடல் வேண்டும்.

- **மழை பெய்தது; குளம் நிறைந்தது.**

இரு பொருளை ஒப்பிட்டுக் கூறும்போது அரைப்புள்ளி இடல் வேண்டும்.

- **நிலவு குளிர்ச்சியானது; சூரியன் வெப்பம் நிறைந்தது.**

ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்களைக் கூறும்போது அரைப்புள்ளி இடல் வேண்டும்.

- பரிசு பெற்றவர்கள் விமலா, கோயம்புத்தூர்; அம்பிகா.குமார், தேனி; கனிமொழி, கரூர்;

6.2.5.3 முக்கால் புள்ளி: (விளக்கிசைக் குறியீடு)

ஒரு தொடரில் வரும் செய்தியை விளக்க, தொடர்ந்து செய்திகள் எழுதப்படும்போது முக்கால் புள்ளி இடப்படும். அரைப் புள்ளிக்குமேல் கால் இடைவெளி தர இந்தக் குறியீடு இடப்படும். மூன்று மாத்திரை அளவு கால இடைவெளி தரவேண்டும்.

என்னவெனில், என்பது, என்றால் போன்ற சொற்களுக்குப் பதிலாகத் தொடரில் முக்கால் புள்ளி இடப்படும்.

- **திருமணத்திற்கு வந்த அனைவரும் சொன்ன செய்தி: உணவு அருமையாக இருந்தது.**
- **வீடு: அம்மா, அப்பா, குழந்தைகள் இணைந்து வாழ்வது.**

சிறு தலைப்பைத் தொடர்ந்து அதனை விரிவாகக் கூறும் செய்திகளின் இடையில் முக்கால் புள்ளி இடப்படும்.

- **அனைவருக்கும் இருக்க வேண்டிய பழக்கங்கள்: உதவி செய்தல், அன்பு காட்டுதல், இனிமையாகப் பேசுதல்.**

உரையாடல் வடிவில் எழுதும்போது, கூறியதாவது என்ற சொல்லிற்குப் பதிலாக முக்கால் புள்ளி இடப்படல் வேண்டும்.

- **ஆசிரியர்: வீட்டுப்பாடம் செய்தாயா?**
- **மாணவன்: இல்லை ஐயா.**
- **ஆசிரியர்: ஏன் எழுதவில்லை?**
- **மாணவன்: ஊருக்குச் சென்றுவிட்டேன் ஐயா! மன்னித்துக் கொள்ளுங்கள். நாளை எழுதி விடுகிறேன்.**

பட்டியல்கள் எழுதும்போது தலைப்புகளை அடுத்து முக்கால் புள்ளி இடல் வேண்டும்.

- பெயர்: குமரேசன்
- தொழில்: எழுத்தாளர்
- பிறந்த தேதி: 19.10.1985

**முற்றுப்புள்ளி: (முடிப்பிசைக் குறி) (.)**

நிறுத்தக் குறியீடுகளில் சூறிப்பிடத்தக்க இடம்பெறுவது முற்றுப்புள்ளி ஆகும். ஒரு தொடர் முடிவு பெற்றுவிட்டது. ஒரு கருத்து முடிந்து விட்டது என்று கூறுவது முற்றுப்புள்ளியின் பணி.

- **எனக்குப் பூக்கள் பிடிக்கும்.**

கட்டளை வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி வரும்.

- **புத்தகத்தை எடுத்து வா.**

படுக்கை வரிசையில் எழுதப்படும் பட்டியலின் இறுதியில் முற்றுப்புள்ளி இடல் வேண்டும்.

- **பால் ஐந்து வகைப்படும். அவை:**
  1. **ஆண்பால்,**

2. **பெண்பால்,**
3. **பலர்பால்,**
4. **ஒன்றன்பால்,**
5. **பலவின்பால்.**

தொடர் முழுவதையும் அடைப்புக்குறிக்குள் எழுதும்போது முடிவில் அடைப்புக்குள் முற்றுப்புள்ளி இடல் வேண்டும். அதுவே கூடுதல் தகவலானால் அடைப்புக்குறிக்கு வெளியே முற்றுப்புள்ளி இடல் வேண்டும்.

- **எல்லாரும் கடைக்குச் சென்று விட்டனர். (அம்மா மட்டும் செல்லவில்லை.)**
- **பலர், பேசும்போது ஆங்கிலச் சொற்கள் கலந்தே பேசுகின்றனர். (ஸ்கூல் போன்றவை).**

**முப்புள்ளி (...)**

தொடரில் விடப்பட்ட பகுதியை முப்புள்ளி இட்டு நிரப்புவர்.

- **அன்றிலிருந்து இன்றுவரை...**

சிந்தனைத் தொடர்ச்சியைக் குறிக்க முப்புள்ளி இடலாம்.

- **அவன் நல்லவனாகவே இருந்திருக்கலாம்...**

சொற்களின் ஒலிப்புத் தொடர்ச்சியைக் குறிக்க முப்புள்ளி இடல் வேண்டும்

- **கொர்ர்...**
- **அம்மா... அம்மா...**

**கேள்விக்குறி: (வினாவிசைக்குறி) (?)**

முற்றுப்புள்ளிக்கு அடுத்து, மிகுதியாகப் பயன்படுத்தப்படும் குறியீடு வினாக்குறியீடு ஆகும்.பொதுவாக வினாச் சொற்கள் வரும் அனைத்துத் தொடர்களிலும் கேள்விக்குறி இடல் வேண்டும்.

- **உன் பெயர் என்ன?**

வினாக்குறிப்புள்ள முற்றுப் பெறாத தொடர்களில் கேள்விக்குறி வரும்

- **நாங்கள் கடைக்குப் போகிறோம். நீங்கள்?**

வியப்போடு கேட்கப்படும் கேள்விகளில் வினாக்குறி வரும்.

- **அமெரிக்காவா போகிறாய்?**

தொடர்ந்து வினாக்கள் வருமானால் இறுதியில் கேள்விக்குறி போட்டால் போதும்.

- **இது படகா இல்லை வீடா?**

**உணர்ச்சிக்குறி: (மெய்ப்பாட்டிசைக்குறி) (!)**

இக்குறியிடு பெரும்பாலும் வியப்புக்குறியீடு என்றே அழைக்கப்படுகிறது. வியப்பு மட்டுமல்லாமல் எல்லா விதமான உணர்ச்சிகளையும் வெளிக்காட்டும் இடங்களிலும் இக்குறி இடப்படுவதால் இது உணர்ச்சிக்குறி என்று அழைக்கப்படுவதே சரியாகும். இதனை இன்னும் தெளிவாக மெய்ப்பாட்டிசைக்குறி எனத் தேவநேயப்பாவாணர் கூறுகிறார்.

உணர்ச்சிகளை (வெளிப்படுத்தும் எல்லாச் சொற்களின் பின்னும் உணர்ச்சிக் குறி இடப்படல் வேண்டும்.

- **எவ்வளவு அழகான மலர்! (வியப்பு)**
- **நம் விருப்பப்படியே அனைத்தும் நன்றாக நடந்து விட்டது! (மகிழ்ச்சி)**
- **குமரனின் தாத்தா விபத்தில் இறந்துவிட்டார்! (அதிர்ச்சி)**
- **பல நூறு பேர் விபத்தில் இறந்துவிட்டனர்! (இரக்கம்)**
- **இருளில் தோட்டத்திற்குப் போனால் பாம்பு கடித்துவிடுமோ! (அச்சம்)**

உணர்ச்சிச் சொற்களின் பின்னாலும், சொற்கள் இரட்டித்து வரும் இடங்களிலும் உணர்ச்சிக்குறி இடல் வேண்டும்.

- **ஆ!**
- **ஐயோ!**
- **பாம்பு! பாம்பு!**

விளிச்சொல் தொடர்ந்து வரும்போது உணர்ச்சிக்குறி இடப்படல் வேண்டும்.

- **அம்மா! அப்பா!**
- **என் உயிர் நண்பனே!**

வாழ்த்துச் சொற்கள் வரும்போது உணர்ச்சிக்குறி இடப்படல் வேண்டும்.

- **வாழ்க! வாழ்க!**

முழக்கச் சொற்களை எழுதும்போது உணர்ச்சிக்குறி இடப்படல் வேண்டும்.

- **உண்மை! முற்றிலும் உண்மை!**

**இரட்டை மேற்கோள் குறி**

உரையாடல்கள், உரைப்பகுதிகளில் வரும் இடங்களில் இக்குறி இடப்படல் வேண்டும்.

- **"நானும் வருகிறேன்" என்றான் மணி.**

**ஒற்றை மேற்கோள் குறி (‘’)**

ஏதாவது ஒரு நூலிலிருந்து ஒரு பகுதியை மேற்கோளாய்க் காட்டும்போது ஒற்றை மேற்கோள் குறி இடப்படல் வேண்டும்.

- **‘அறம் செய விரும்பு’ என ஔவையார் கூறியுள்ளார்.**

தொடரில் நம் எண்ணத்தை வெளிப்படுத்தும் கருத்து வரும்போது அது ஒற்றை மேற்கோள் குறிக்குள் எழுதப்படல் வேண்டும்.

- **அவனைப் பார்த்தவுடன் 'அவன் மிகவும் நல்லவன்' என நினைத்தேன்.**

ஒரு சொல்லை அல்லது தொடரைத் தனித்துக் காட்ட ஒற்றை மேற்கோள் குறி இடப்படல் வேண்டும்.

- **கணக்கில் அவன் ‘புலி’.**

கலைச்சொல், மொழிபெயர்க்கப்பட்ட பகுதி ஆகியவற்றை எழுதும்போது ஒற்றை மேற்கோள் குறி இடப்படல் வேண்டும்.

- **'ஏ' என்னும் இடைச்சொல்**
  **ஊரிலுள்ள குழந்தைகள் மல்லை இஹத்தெயை ‘ஏ காக்கெ சொப்பு! 'ஏய் காக்க சொப்பு' என்றே அழைத்தனர்.**

மேற்கோள்கள், தலைப்பு, பழமொழி போன்றவை தொடரில் வரும்போது ஒற்றை மேற்கோள் குறி இடப்படல் வேண்டும்.

- **இயற்கையை வருணித்து ‘அழகின் சிரிப்பு’ என்ற தலைப்பில் பல பாடல்களைப் பாரதிதாசன் எழுதியுள்ளார்.**

பிறருடைய கருத்தை உள்வாங்கி ஒரு தொடரை உருவாக்கும் பொழுதும் ஒற்றை மேற்கோள் குறி இடப்படல் வேண்டும்.

‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்ற கூற்றின் பொருளை நான் இப்போது உணர்ந்தேன்.

**தனிமேற்கோள் குறி (‘)**

எழுத்து அல்லது எண் விடுபட்டுள்ளது என்பதைக் குறிக்க இக்குறி பயன்படுத்தப்படுகிறது. எழுத்து விடுபட்டு எழுதுவது தமிழ்மொழியில் இல்லை. எனவே வருடங்களைக் குறிக்க மட்டும் இங்குப் பயன்படுத்தப்படுகிறது.

- 30மார்ச், '99

**மேற்படிக்குறி (,,)**

முதல் வரியில் சொல்லப்பட்ட செய்தியே அடுத்த வரியிலும் தொடரும்போது இக்குறி இடப்படும்.

போட்டியில் கலந்து கொண்டோர் விவரம்

- **அம்பிகா பாட்டுப் போட்டி**
- **விமல் ,,**
- **குமரன் ,,**

**பிறை அடைப்புக்குறி ()**

விவரித்தல், கூடுதல் ததவல் போன்றவை இக்குறியிட்டுச் சொல்லப்படும்.

- **புதன்கிழமை (தை 10) காலை விழா நடந்தது.**
- **ஓட்டப்பந்தயத்தில் செழியன் (வயது 10) முதல் பரிசு பெற்றான்.**

தமிழ்த் தேதிகள் எழுதும்போது அவற்றிற்கு இணையான ஆங்கிலத் தேதியைப் பிறை அடைப்புக்குள் எழுத வேண்டும்.

- **ஐப்பசி 16ஆம் நாள் (2.11.2021)**

தமிழை அடுத்துப் பிறமொழிச் சொற்கள் வரும்போதும் பிறமொழியை எழுத்துப் பெயர்த்து எழுதும்போதும் பிறை அடைப்புக்குறி இடல் வேண்டும்.

- **ரிச் டாட் புவர் டாட் (Rich dad poor dad) புத்தகம் வாழ்வில் பொருளாதார நிலையை உயர்த்த வழிகள் கூறுகிறது. இந்தப் புத்தகங்களைப் பிரதி (Xerox) எடுத்துக் கொள்ளலாம்.**

மேற்கோள் காட்டப்பட்டவையின் ஆதார நூல்களின் பெயர்கள் பிறை அடைப்பில் எழுத வேண்டும்.

- **'அன்பெனப் படுவது பகிர்மானத்தில் பிழைபடாமை' (கவிக்கோ அப்துல் ரகுமான்)**

கதைகளின் இறுதியில் முடிவு அல்லது தொடரும் ஆகியவை பிறை அடைப்புக்குள் எழுதப்படல் வேண்டும்.

- **(முற்றும்)**
- **(தொடரும்)**

**சதுர அடைப்பு:**

பிறை அடைப்புக்குள் மற்றோர் அடைப்பு தேவைப்படும்போது சதுர அடைப்பைப் பயன்படுத்தலாம்.

- **பாரதியார் கண்ணனைப் புகழ்ந்து (கண்ணன் என் காதலன் [பக் - 30], கண்ணன் என் தாய் [பக் - 33], கண்ணன் என் சீடன் [பக் - 40] எனப் பல பாடல்கள் எழுதியுள்ளார்.**

**இணைப்புக் கோடு: (-)**

தனித்தனியே கூறப்பட்டவை அனைத்தும் முடிவில் தொகுப்பு என உணர்த்தும் வகையில் எழுதுகையில் இணைப்புக்கோடு போடவேண்டும்.

- **எலுமிச்சை, ஆரஞ்சு, மிளகாய், பப்பாளி - இவை விட்டமின் சி நிறைந்த பழங்கள்**
- **என்று, என்பதற்கு, இடையில், என்னடுவனில், போன்ற சொற்களுக்குப் பதிலாக இணைப்புக் கோடு போடலாம்.**
- **"வாடா போகலாம்" - அம்மா அவனைக் கூட்டிக் கொண்டு நடந்தாள். (என்று)**
- **இந்தியா பாகிஸ்தான்- ஹாக்கிப்போட்டி (இடையில்)**
- **எனது மிகப் பெரிய பலம் - எனது குடும்பம் (என்னவெனில்)**
- **மரம் - இயற்கையின் வாம். (என்பது)**

இது முதல் இதுவரை எனக் கூறும் எண்களுக்கு மத்தியில் இணைப்புக் கோடு இடல் வேண்டும்.

- **வேலை நேரம்: 9.30 - 4.00**

மேற்கோள் கூறப்படும் செய்தி உள்ள நூலின் பெயர் எழுதும்போது இணைப்புக் கோடு இடல் வேண்டும்.

- **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - திருக்குறள்.**

**சாய்கோடு:**

ஒன்றுக்கு மேற்பட்ட பொருத்தமான சொற்களை எழுதும்போது அல்லது என்ற சொல்லுக்குப் பதிலாகச் சாய்கோடு இடலாம்.

- **இந்த வேலையில் சேர தமிழ் / ஆங்கிலம் / மலையாளம் / கன்னடம் ஆகிய மொழிகளில் ஒன்று தெரிந்திருக்க வேண்டும்.**

சுருக்க முறைகள் எழுதும்போது சாய்கோடு பயன்படும்.

- **5 / பெ(தந்தை பெயர்)**

அல்லது என்ற பொருளில் பயன்படுத்துவதுபோல மற்று என்ற பொருளில் எழுதும்போது சாய்கோடு இடக்கூடாது.

- **அந்த ஊருக்கு விடுதி, பேருந்து வசதிகள் உண்டு.**

## மாதிரி வினாக்கள்

1. **சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்: கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?**

   a) கட்டை முதுமையில் உயரம் இளமையில்

   b) உயரம் இளமையில் கட்டை முதுமையில்

   c) இளமையில் உயரம் முதுமையில் கட்டை

   d) இளமையில் கட்டை முதுமையில் உயரம்

   e) விடை தெரியவில்லை

   விடை: c

2. **சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்: கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?**

   a) மேல் உழுவதை அகல விட உழு ஆழ

   b) அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்

   c) அகல உழுவதை விட மேல் ஆழ உழு

   d) ஆழ உழுவதை விட அகல உழுவதே மேல்

   e) விடை தெரியவில்லை

   விடை: b

3. **சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்: கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?**

   a) மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்

   b) பண்பில்லா தவர் போல்வர் மக்கட் மரம்

   c) பண்பில்லா தவர் மக்கட் மரம் போல்வர்

   d) பண்பில்லா தவர் மரம் போல்வர் மக்கட்

   e) விடை தெரியவில்லை

   விடை: a

4. **சரியான சொற்றொடரைத் தேர்க:**

   a) பாரதியார் குயில்பாட்டைப் பாடினர்.

   b) குயில் பாட்டு பாரதியாரால் பாடப்பட்டது.

c) குயில் பாட்டை பாடினார் பாரதியார்.

d) குயில் பாட்டைப் பாரதியார் பாடியவர்

e) விடை தெரியவில்லை

விடை: b

**5. சொற்கள் ஒழுங்குபடுத்துக:**

வியனகர் குறைபடாக் கொளக் கூழுடை கொளக்

a) கொளக் கொளக் கூழுடை வியனகர் குறைபடாக்

b) கூழுடை வியனகர் குறைபடாக் கொளக் கொளக்

c) கொளக் கூழுடை வியனகர் கொளக் குறைபடாக்

d) கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்

e) விடை தெரியவில்லை

விடை: d

**6. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்: கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?**

a) கல்வி கசடர்க்கு நல்கா தூக்குமரம்

b) குடியைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புகள்

c) சொல்லுக்கு உறுதி நாலும் இரண்SDும்

d) வாழ்வின் இலக்கணம் தமிழர்கள் அறிந்தவர்கள்

e) விடை தெரியவில்லை

விடை: b

**7. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்: கீழ்க்கண்டவற்றில் எது தவறானது?**

a) பசுவைப் பிரிந்த கன்று போல

b) ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

c) பண்பட்ட பைந்தமிழ் பாழ்பட்டுக் கிடந்தது

d) ஒரு சோறு பதம் ஒரு பானைச் சோற்றுக்கு

e) விடை தெரியவில்லை

விடை: d

**8. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்**

a) இன்றைய சூழலில் கவசங்கள் இல்லை வெப்பத்தைத் தாங்கும் அளவுக்கு

b) கவசங்கள் தாங்கும் அளவுக்கு வெப்பத்தைத் இன்றைய சூழலில் இல்லை

c) வெப்பத்தைத் தாங்கும் அளவுக்கு இன்றைய சூழலில் கவசங்கள் இல்லை

d) தாங்கும் அளவுக்கு இன்றைய வெப்பத்தைத் சூழலில் கவசங்கள் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**9. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.**

a) பொருள் என்னும் சொல்லுக்கு அழகு அணி

b) பொருள் அணி என்னும் சொல்லுக்கு அழகு

c) அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள்

d) அழகு என்பது பொருள் அணி என்னும் சொல்லுக்கு

e) விடை தெரியவில்லை

விடை: c

**10.சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்**

a) மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும்

b) அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் கல்வியாக ஆக்குவதன் மூலம் மொழி பெயர்ப்பைக் பெற முடியும்

c) கல்வியாக பெற மொழி பெயர்ப்பைக் ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் முடியும்

d) நாம் எளிதாகப் பெற முடியும் மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும்

e) விடை தெரியவில்லை

விடை: a

**11.சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக**

a) விளைநிலமாக இனிய சொல்லையே கொள்ள வேண்டும்

b) கொள்ள வேண்டும் இனிய சொல்லையே விளைநிலமாக

c) இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ள வேண்டும்

d) இனிய சொல்லையே கொள்ள வேண்டும் விளைநிலமாக

e) விடை தெரியவில்லை

விடை: c

**12.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக: பதிவு செய்யப்பட்டது**

I. செய்வினை

II. செயப்பாட்டு வினை

III. பிறவினை

IV. தன்வினை

a) II மட்டும்

b) III மட்டும்

c) IV மட்டும்

d) I மட்டும்

e) விடை தெரியவில்லை

விடை: a

**13.சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.**

a) 'விருந்தோம்பல்' முதன்மையானது தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில்

b) முதன்மையானது 'விருந்தோம்பல்' தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில்

c) 'விருந்தோம்பல்' பண்பாட்டுக் கூறுகளில் தமிழர்களின் முதன்மையானது

d) தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் 'விருந்தோம்பல்' முதன்மையானதாகும்

e) விடை தெரியவில்லை

விடை: d

**14.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக:**

பறவைகள் பறக்கா

a) உடன்பாட்டுத் தொடர்

b) எதிர்மறைத் தொடர்

c) பொருள்மாறா எதிர்மறைத் தொடர்

d) அயற்கூற்றுத் தொடர்

e) விடை தெரியவில்லை

விடை: b

**15.எத்தனை இணைகள் தவறாகப் பொருந்தியுள்ளன?**

I. மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் - உடன்பாட்டுத் தொடர்

II. மக்கள் உடன்பாட்டைத் தெரிவித்திலர் -பொருள்மாறா எதிர்மறைத் தொடர்

III. கண்ணன் பாடம் படித்திலன் - எதிர்மறைத் தொடர்

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: d

**16.தவறான இணைகள் எது /எவை?**

I. கரையைச் **சேர்வான்** - தன்வினை

II. பாத்திமா திருக்குறள் கற்பித்தாள் - செயப்பாட்டு வினை

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**17.செய்வினை வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க.**

a) பதவியை விட்டு நீக்கப்பட்டான்

b) உண்ணப்படும் தமிழ்த் தேனே.

c) கருத்தைப் பதிவு செய்தான்.

d) கருத்துப்பதிவு செய்யப்பட்டது.

e) விடை தெரியவில்லை

விடை: c

**18.பசுவும் கன்றும் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருக்கின்றன -எவ்வகை வாக்கியம்?**

a) செய்தி வாக்கியம்

b) கலவை வாக்கியம்

c) தெரிநிலை வினை முற்று வாக்கியம்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a

19.**மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர்**

பிறவினை வாக்கியமாக மாற்றுக.

a) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

b) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்யவில்லை.

c) மொழியியல் அறிஞர்களால் திராவிட மொழிகள் ஆய்வு செய்யப்பட்டது.

d) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்யாமல் இல்லை.

e) விடை தெரியவில்லை

விடை: a

**20.பொருத்துக.**

(A) பாரதி நாளை வருவான் - 1) செய்வினைத் தொடர்

(B) எவ்வளவு உயரமான கோபுரம்! - 2) செய்தித் தொடர்

(C) கவிதா உரை படித்தாள் - 3) தன்வினைத் தொடர்

(D) என் அண்ணன் நேற்று வந்தான் - 4) உணர்ச்சித் தொடர்

a) 2 4 1 3

b) 2 4 3 1

c) 4 2 3 1

d) 3 1 2 4

e) விடை தெரியவில்லை

விடை: a

**21.சரியான இணைகள் எது /எவை?**

I. நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தான் – காரணவினைத் தொடர்

II. உண்ணும் தமிழ்த்தேனே - செய்வினைத் தொடர்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**22.தவறான இணைகள் எது /எவை?**

I. பதவியை விட்டு நீக்குவித்தான் - செயப்பாட்டுவினை

II. திராவிட மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுப்பட்டுள்ளன - செய்வினைத் தொடர்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**23.சரியான இணைகள் எது /எவை?**

I. பறவைகள் பறக்காமல் இரா - எதிர்மறைத் தொடர்

II. சரவணன் பாடம் படித்தான் - உடன்பாட்டுத்தொடர்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**24.செய்வினைத் தொடரைக் கண்டறிக.**

a) கயல்விழி பாடாதே

b) கயல்விழி பாடி மகிழ்ந்தாள்

c) கயல்விழியால் பாடப்பட்டது

d) கயல்விழி பாடி மகிழ்வித்தாள்

e) விடை தெரியவில்லை

விடை: b

**25.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக:**

அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார்

a) செயப்பாட்டு வினை வாக்கியம்

b) தன்வினை வாக்கியம்

c) பிறவினை வாக்கியம்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**26.பொருத்தமான செயப்பாட்டு வினைத் தொடரைத் தேர்க.**

a) சட்டி உடைந்தது

b) சட்டியை உடைத்தார்

c) சட்டி உடைந்து போயிற்றா

d) சட்டி உடைந்து போயிற்று

e) விடை தெரியவில்லை

விடை: d

**27.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்**

பிறவினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க:

a) மாணவன் பள்ளிக்கு புறப்பட்டுச் சென்றான்

b) பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார்

c) பாட்டு பாட மாணவிகள் கூட்டமாக வந்தனர்

d) அவர்கள் நன்றாகப் படித்தனர்

e) விடை தெரியவில்லை

விடை: b

**28.தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க.**

a) நாடு மன்னரால் ஆளப்பட்டது

b) மன்னர் நாட்டை கற்கவில்லை

c) மன்னர் நாட்டை ஆண்டாரா?

d) மன்னர் நாட்டை ஆண்டார்.

e) விடை தெரியவில்லை

விடை: d

**29.செய்வினைத் தொடரைக் கண்டறிக.**

a) உரை கவிதாவால் படிக்கப்பட்டது.

b) அவனை திருந்தச் செய்தான்.

c) அப்பா சொன்னார்.

d) பணம் காணாமல் போனது.

e) விடை தெரியவில்லை

விடை: c

**30.தன்வினைத் தொடரைக் கண்டறிக**

a) பதவியை விட்டு விலக்கப்பட்டான்

b) பதவியை விட்டு நீக்கப்பட்டான்

c) பதவியை விட்டு நீக்கினான்

d) பதவியை விட்டு நீங்கினான்

e) விடை தெரியவில்லை

விடை: d

**31.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக:**

ஆ! கடல்காற்று எவ்வளவு இதமாக வீசுகிறது

a) வினாத் தொடர்

b) உணர்ச்சித் தொடர்

c) செய்தித் தொடர்

d) கட்டளைத் தொடர்

e) விடை தெரியவில்லை

விடை: b

**32.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக:**

மூத்தோர் சொல் கேள்

a) விழைவு வாக்கியம்

b) கட்டளை வாக்கியம்

c) செய்தி வாக்கியம்

d) உணர்ச்சி வாக்கியம்

e) விடை தெரியவில்லை

விடை: b

**33.சரியான இணைகள் எது / எவை?**

I. ஐயகோ! இளவழகனாரின் மறைவு ஈடு செய்யவியலுமோ! - உணர்ச்சி வாக்கியம் (வியப்பு)

II. பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்துவிட்டனவே! - உணர்ச்சி வாக்கியம் (அவலம்)

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**34.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக:**

முயன்றால் அனைத்தும் முடியும்

a) விழைவு வாக்கியம்

b) கட்டளை வாக்கியம்

c) செய்தி வாக்கியம்

d) உணர்ச்சி வாக்கியம்

e) விடை தெரியவில்லை

விடை: c

**35.சரியான இணையைத் தேர்ந்தெடு:**

I. நான் கடைக்குப் போனால், நல்ல பழங்களை வாங்கி வருவேன் - கலவை வாக்கியம்

II. நாள் கடைக்குப் போவேன்; நல்ல பழங்களை வாங்கி வருவேன் - தொடர் வாக்கியம்

III. நான் கடைக்குப் போவேன்; நான் நல்ல பழங்களை வாங்கி வருவேன் - தனி வாக்கியம்

a) I மற்றும் III

b) II மற்றும் III

c) I மற்றும் II

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: d

**36.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக:**

ஆசிரியர், "வேலா இலக்கணத்தை நன்றாகப் படி" என்று கூறினார்.

a) அயற்கூற்று

b) நேர்க்கூற்று

c) செய்தித் தொடர்

d) கட்டளை தொடர்

e) விடை தெரியவில்லை

விடை: b

**37.சரியான இணைகள் எது /எவை?**

I. நாட்டினை காக்க போராடு - உணர்ச்சித்தொடர்

II. உலகம் மிகப்பெரியது - உடன்பாட்டுத்தொடர்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: d

**38.மாறுப்பட்டதை கண்டறிக.**

a) கோவலன் திருந்தினான்

b) கண்ணகி வருந்தினாள்

c) காளையை அடக்கு.

d) சேரன் சோறு உண்டான்

e) விடை தெரியவில்லை

விடை: c

**39.சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.**

I. நீடூழி வாழ்க! - உணர்ச்சித்தொடர்

II. தென்னை மரத்துக்குக் கிளைகள் இல்லை - செய்வினைத் தொடர்

III. என்னே, அருவியின் அழகு! - உணர்ச்சித்தொடர்

IV. கண்ணன் பாடம் படித்திலன் - பொருள்மாறா எதிர்மறைத்தொடர்

a) III

b) IV

c) I

d) II

e) விடை தெரியவில்லை

விடை: a

**40.இராமன் திருச்சி சென்றான்; மலைக்கோட்டை ஏறினான்; கடவுளை வழிபட்டான். - இது எவ்வகை வாக்கியம்?**

a) செய்தி வாக்கியம்

b) தொடர் வாக்கியம்

c) கலவை வாக்கியம்

d) எதிர்மறை வாக்கியம்

e) விடை தெரியவில்லை

விடை: b

**41.எத்தனை இணைகள் தவறாகப் பொருந்தியுள்ளன?**

I. நாட்டினை காக்க போராடு - உடன்பாட்டுத் தொடர்

II. நேற்று மழை பெய்தது, அதனால் ஏரிகுளங்கள் நிரம்பின - கலவை வாக்கியம்

III. சேர, சோழ, பாண்டியர் மூவரும் தமிழை வளர்த்தனர் - தொடர்நிலைத் தொடர்

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**42.எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக:**

தலைவர், தாம் திருக்குறளைக் கற்று வாழ்வில் உயர்ந்ததாகக் கூறினார்.

a) செய்வினை

b) நேர்க்கூற்று

c) அயற்கூற்று

d) செய்தித் தொடர்

e) விடை தெரியவில்லை

விடை: c

**43.‘புலி புல்லைத் தின்னா’– எவ்வகை வாக்கியம் எனக் காண்க.**

a) எதிர்மறை வாக்கியம்

b) உடன்பாட்டு வாக்கியம்

c) நேர்க்கூற்று வாக்கியம்

d) அயற்கூற்று வாக்கியம்

e) விடை தெரியவில்லை

விடை: a

**44.பிறவினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க**

a) தந்தை மகனை நன்றாகப் படிக்கப்பட்டது.

b) தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்.

c) தந்தை மகனை நன்றாக படிக்க வைக்கப்பட்டது

d) தந்தையை போல மகனும் நன்றாக படித்தார்.

e) விடை தெரியவில்லை

விடை: b

**45.பொருத்துக:**

| | |
|---|---|
| (A) கபிலரால் குறிஞ்சிப்பாட்டு இயற்றப்பட்டது | 1) உணர்ச்சி வாக்கியம் |
| (B) குறிஞ்சிப்பாட்டைக் கபிலர் எழுதினார் | 2) வினா வாக்கியம் |
| (C) என்னே! குறிஞ்சிப்பாட்டின் சுவை! | 3) செயப்பாட்டு வினை |
| (D) குறிஞ்சிப்பாட்டைக் கபிலர் எழுதினாரா? | 4) செய்வினை |

a) 3 4 1 2

b) 1 2 3 4

c) 2 3 4 1

d) 4 3 2 1

e) விடை தெரியவில்லை

விடை: a

**46.திருக்குறளை அனைவரும் அறிவர் என்பதை வினா வாக்கியமாக மாற்றுக.**

a) திருக்குறளை அறியாதவர் யார்?

b) யாரெல்லாம் திருக்குறளை அறிவர்?

c) திருக்குறளை அறியாதவர் உளரோ?

d) திருக்குறளை அறிந்தவர் உளரோ?

e) விடை தெரியவில்லை

விடை: b

**47.கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் - என்பதை பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக?**

a) கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்

b) கலைச்செல்வி கட்டுரை எழுத விரும்பவில்லை

c) கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்

d) கலைச்செல்வி கட்டுரை வாசிக்கவில்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**48.தவறான இணையைக் காண்க:**

| | | |
|---|---|---|
| I. எங்கே செல்கிறாய் | – | வினா வாக்கியம் |
| II. நீருக்கு அழுத்தம் உண்டு | – | செய்தி வாக்கியம் |
| III. ஐயோ! அதிக மழையால் வீடு இடிந்ததே! | – | உணர்ச்சி வாக்கியம் |
| IV. எழுந்து நில் | – | வினா வாக்கியம் |

a) I மட்டும்

b) II மட்டும்

c) III மட்டும்

d) IV மட்டும்

e) விடை தெரியவில்லை

விடை: d

**49.சரியான இணைகளைத் தேர்வு செய்க.**

I. இளமையில் கல். - விழைவுத் தொடர் (வாழ்த்துதல்)

II. உன் திருக்குறள் நூலைத் தருக. - விழைவுத் தொடர் (ஏவல்)

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: d

**50.பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தார் என்பதை வினா வாக்கியமாக மாற்றுக.**

a) பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் பிறந்தாரா?

b) பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தாரோ?

c) பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தார்?

d) பரிதிமாற் கலைஞர் எங்கு பிறந்தார்?

e) விடை தெரியவில்லை

விடை: d

**51.தவறான இணைகள் எது / எவை?**

I. உழவுத்தொழில் வாழ்க. - விழைவுத் தொடர் (வாழ்த்துதல்)

II. கல்லாமை ஒழிக - விழைவுத் தொடர் (வைதல்)

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: d

**52.வழுநிலைகளைப் பொருத்துக.**

(A) செழியன் வந்தது – 1) இடம்

(B) கண்ணகி உண்டான் - 2) காலம்

(C) நீ வந்தேன் – 3) பால்

(D) நேற்று வருவான் – 4) திணை

a) 1 2 3 4

b) 4 3 1 2

c) 4 1 2 3

d) 3 1 2 4

e) விடை தெரியவில்லை

விடை: b

**53.சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.**

a) இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்

b) இதனால் இவன்முடிக்கும் இதனை என்றாய்ந்து அவன்கண் அதனை விடல்

c) இவன்முடிக்கும் இதனை இதனால் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்

d) அதனை இவன்முடிக்கும் இதனால் என்றாய்ந்து இதனை அவன்கண் விடல்

e) விடை தெரியவில்லை

விடை: a

**54.சொற்கள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட தொடரைக் கண்டறிக.**

a) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று

b) குளத்தில் பூக்கும் மல்லிகை மலர் அன்று

c) பூக்கும் மலர் குளத்தில் மல்லிகை அன்று

d) மல்லிகை மலர் பூக்கும் குளத்தில் அன்று

e) விடை தெரியவில்லை

விடை: a

**55.சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.**

a) போராடிக் கொண்டே மனிதன் இருக்கிறான் இயற்கையோடு

b) இயற்கையோடு இருக்கிறான் போராடிக் கொண்டே மனிதன்

c) மனிதன் இயற்கையோடு போராடிக்கொண்டே இருக்கிறான்

d) போராடிக் இருக்கிறான் மனிதன் இயற்கையோடு கொண்டே

e) விடை தெரியவில்லை

விடை: c

**56.சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக.**

a) திளைக்காத தமிழன் உண்டா குறளின்பத்தில்?

b) குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

c) தமிழன் உண்டா குறளின்பத்தில் திலைக்காத?

d) உண்டா தமிழன் திளைக்காத குறளின்பத்தில்?

e) விடை தெரியவில்லை

விடை: b

**57.சரியான தொடரை அறிக:**

a) பசுக் கூட்டம் மேய்ந்து சென்றன

b) நீர்நிலையைச் சுற்றி யானைக் கூட்டம் கூடியது

c) திராட்சைக் கொத்து தொங்கியது

d) ஆட்டுக் கூட்டத்தைப் பட்டியில் அடைத்தனர்

e) விடை தெரியவில்லை

விடை: b

**58.தவறான மரபை எடுத்தெழுதுக**

a) மாட்டு சாணம்

b) எலி புழுக்கை

c) ஆட்டு சாணம்

d) கழுதை புட்டை

e) விடை தெரியவில்லை

விடை: c

**59.மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக**

a) புளியங்கன்று

b) விளாங்கன்று

c) வாழை நாற்று

d) தென்னங்கன்று

e) விடை தெரியவில்லை

விடை: a

**60.பொருந்தா வினை மரபைக் கண்டறிக.**

a) கட்டுரை எழுது

b) தீ மூட்டு

c) வரப்பு வெட்டு

d) விளக்கு ஏற்று

e) விடை தெரியவில்லை

விடை: c

**61.கண்மணி நாளை பாடம் படித்தாள். பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.**

a) கண்மணி நாளை பாடம் படித்தாள்

b) கண்மணி நாளை பாடம் படிப்பாள்

c) கண்மணி இன்று பாடம் படிக்கவில்லை

d) கண்மணி நேற்று பாடம் படிப்பாள்

e) விடை தெரியவில்லை

விடை: b

**62.மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

நேற்று தென்றல் காற்று அடித்தது.

a) காற்று பறந்தது

b) காற்று ஓய்ந்தது

c) காற்று வீசியது

d) காற்று சுழன்றது

e) விடை தெரியவில்லை

விடை: c

**63.மரபுப் பிழைகள் - (ஒலி மரபு)**

குனுகும் என்ற ஒலி மரபுச் சொல்லுக்கு உரிய பறவை எது?

a) குயில்

b) கூகை

c) மயில்

d) புறா

e) விடை தெரியவில்லை

விடை: d

**64.மரபுப்பிழை நீக்கி எழுது.**

இல்லத்தின் அருகே கூரை ___________

a) கட்டினர்

b) உருவாக்கினர்

c) வேய்ந்தனர்

d) முடைந்தனர்

e) விடை தெரியவில்லை

விடை: c

**65.மரபு பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க**

a) சேவல் கூவும்

b) கூகை கூவும்

c) வண்டு அகவும்

d) கோழி கரையும்

e) விடை தெரியவில்லை

விடை: a

**66.சொற்களின் கூட்டுப் பெயர்களைக் பொருத்துக**

(A) ஆலம் - 1) பாத்தி

(B) இலுப்பை - 2) கொல்லை

(C) கம்பம் - 3) தோட்டம்

(D) கீரை - 4) காடு

a) 3 2 1 4

b) 2 3 1 4

c) 4 3 2 1

d) 1 2 3 4

e) விடை தெரியவில்லை

விடை: c

**67.மரபுப் பிழை நீக்கிய சொல்லைத் தேர்வு செய்க.**

a) பூனை சீறும்.

b) மயில் கத்தும்

c) கிளி கூவும்

d) குயில் அகவும்

e) விடை தெரியவில்லை

விடை: a

**68.தவறான வினை மரபை எடுத்தெழுதுக**

a) அம்பை எய்

b) உமி கருக்கு

c) ஓவியம் வரை

d) ஆடை உடுத்து

e) விடை தெரியவில்லை

விடை: c

**69.கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

a) ஈச்சம், பனை, பலா - ஓலை

b) வேப்பந்தழை

c) நெல், வரகு - தாள்

d) சோளத்தட்டை

e) விடை தெரியவில்லை

விடை: a

**70.கொடுக்கப்பட்ட சொற்களுள் சரியான மரபுச் சொல்லைத் தேர்க.**

a) மான் குட்டி

b) யானைக்கன்று

c) கீரீக் குட்டி

d) அணில் குட்டி

e) விடை தெரியவில்லை

விடை: b

**71.கீழ்க்கண்டவற்றுள் காய்களின் இளமைப் பெயர்கள் குறித்து பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

a) வெள்ளரிப்பிஞ்சு

b) தென்னங்குரும்பை

c) மாம்பிஞ்சு

d) வாழைக்கச்சல்

e) விடை தெரியவில்லை

விடை: c

**72.சரியானதைத் தேர்ந்தெடு (ஒலிமரபு)**

1) ஆடு கத்தும்

2) எலி அலப்பும்

3) ஆந்தை குழறும்

a) 1 மட்டும்

b) 1, 3 மட்டும்

c) 2, 3 மட்டும்

d) 2 மட்டும்

e) விடை தெரியவில்லை

விடை: a

**73.கூற்றை கவனி:**

“வாடா இராசா, வாடா கண்ணா” என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது எவ்வகை வழுவமைதி?

a) திணை வழுவமைதி

b) பால் வழுவமைதி

c) மரபு வழுவமைதி

d) இட வழுவமைதி

e) விடை தெரியவில்லை

விடை: b

**74.எதிர் காலத் தொடரை சுட்டுக.**

a) நான் உணவு உண்டேன்

b) நான் உணவு உண்கிறேன்

c) நான் உணவு உண்பேன்

d) நான் உணவு உண்ணவில்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**75.சரியான இணையை தேர்ந்தெடு.**

a) முருகன் பாடம் படித்தான் - எதிர்காலம்

b) நாளை பள்ளிக்கு வருவேன் - எதிர்காலம்

c) நாளை பள்ளிக்கு விடுமுறை - இறந்தகாலம்

d) நேற்று மழை பெய்தது - நிகழ்காலம்

e) விடை தெரியவில்லை

விடை: b

**76.செல்லா நின்றார் -காலம் சுட்டுக.**

a) இறந்தகாலம்

b) நிகழ்காலம்

c) எதிர்காலம்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**77.பழத்தோல் வகை குறித்து பொருந்தாத இணையைத் தேர்வு செய்க**

a) திண்மையானது - தோல்

b) வன்மையானது - ஓடு

c) சுரையின் ஓடு - குடுக்கை

d) மிக மெல்லியது - தொலி

e) விடை தெரியவில்லை

விடை: b

**78.நிறுத்தற்குறிகளை அறிதல்.**

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

a) கூரன் இங்கு வந்தாளா. அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?

b) மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல் முதலான உணர்ச்சியை, வெளியிடும் இடங்களில், வியப்புக்குறி இட வேண்டும்

c) 'வளர் பிறையும் தேய் பிறையும்' என்னும் தலைப்பில் பேசுக.

d) திருமணம்: வளைகாப்பு: பிறந்தநாள் போன்றவற்றை இல்லவிழாக்களாக கொண்டாடினர்.

e) விடை தெரியவில்லை

விடை: c

**79.சரியற்ற கூற்று/கூற்றுகளை தேர்வு செய்க:**

I. சிறு தலைப்பு, நூற்பகுதி எண் முதலியன விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்காற்புள்ளி (:) வரும்

II. ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களில் அரைப்புள்ளி (;) வரும்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை, IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: d

**80.சரியான கூற்று/ கூற்றுகளைத் தேர்வு செய்யவும்:**

I. பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி (,) வரும்.

II. ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களில் முக்காற் புள்ளி (:) வரும்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை, IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a

**81.நிறுத்தற்குறிகளை அறிதல்.**

நிறுத்தற்குறிகள் (எது தவறானது)

a) 11வது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி "பாரதி" என்னும் பட்டம் பெற்றார் பாரதியார்.

b) பாரத ஸ்டேட் வங்கி, 'இலா' என்னும் மென்பொருளை உருவாக்கியிருக்கிறது.

c) தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.

d) மனிதா ! மனிதா ! அழைப்பது கேட்கிறதா? எங்கு பார்க்கிறாய்? யாரைத் தேடுகிறாய்?

e) விடை தெரியவில்லை

விடை: a

**82.நிறுத்தற்குறிகளை அறிதல்**

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

a) மீனே, ஏன் இப்படி தூண்டிலை இழுக்கிறாய்!

b) மீனே! ஏன் இப்படி தூண்டிலை இழுக்கிறாய்?

c) மீனே, ஏன் இப்படி தூண்டிலை இழுக்கிறாய்?

d) "மீனே! ஏன்? இப்படி தூண்டிலை இழுக்கிறாய்"

e) விடை தெரியவில்லை

விடை: b

**83.நிறுத்தற்குறிகளை அறிதல்.**

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

a) சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்?

b) உயர்திணை, அஃறிணை என இருவகைத் திணைகளை அறிவோம்.

c) "பாகற்காய் கசப்புச்சுவை உடையது"

d) தமிழ்மொழி பேசவும், படிக்கவும் எழுதவும் உகந்த மொழி!

e) விடை தெரியவில்லை

விடை: b

**84.சரியான நிறுத்தற்குறிகளை தருக.**

a) தமிழ்மொழி இனிமை, வளமை, சீர்மை மிக்கது.

b) தமிழ்மொழி இனிமை, வளமை, சீர்மை, மிக்கது.

c) தமிழ்மொழி இனிமை வளமை சீர்மை மிக்கது

d) தமிழ்மொழி, இனிமை, வளமை, சீர்மை மிக்கது.

e) விடை தெரியவில்லை

விடை: a

**85.சரியான நிறுத்தற் குறித்தொடரை காண்க.**

a) ஆ; எவ்வளவு பெரிய கரடி? கரடிக்கு மரம் ஏறத் தெரியும்.

b) ஆ! எவ்வளவு பெரிய கரடி. கரடிக்கு மரம் ஏறத் தெரியுமா?

c) ஆ, எவ்வளவு பெரிய கரடி? கரடிக்கு மரம் ஏறத் தெரியுமா

d) ஆ. ஆ! எவ்வளவு பெரிய கரடி, கரடிக்கு மரம் ஏறத் தெரியுமா?

e) விடை தெரியவில்லை

விடை: b

**86.ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

a) ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தார்

b) ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தான்

c) ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தது

d) ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்

e) விடை தெரியவில்லை

விடை: d

**87.பிழையைக் கண்டறிதல்.**

a) எருது வண்டி இழுத்தன

b) எருது வண்டியை இழுத்தது

c) எருது வண்டிகள் இழுத்தன

d) எருது வண்டிகளை இழுத்தன

e) விடை தெரியவில்லை

விடை: b

**88.ஒருமை பன்மை பிழை நீக்குக.**

a) மதியழகன் சூறாவளியின் போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பினார்கள்

b) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பினான்

c) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பின

d) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பியது

e) விடை தெரியவில்லை.

விடை: b

**89.ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.**

a) நான்கு பக்கங்களிலும் மாட வீதிகள் அமைந்துள்ளது

b) நான்கு பக்கங்களிலும் மாட வீதிகள் அமைந்தது

c) நான்கு பக்கங்களிலும் மாட வீதிகள் அமைந்திருந்தது

d) நான்கு பக்கங்களிலும் மாட வீதிகள் அமைந்துள்ளன

e) விடை தெரியவில்லை

விடை: d

**90.ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

a) அவன் நல்லவன் அல்ல

b) நாங்கள் ஏழைகள் அல்லோம்

c) நீ எனக்கு நண்பன் அல்ல

d) பானையை உடைத்தது கண்ணன் அல்ல

e) விடை தெரியவில்லை

விடை: b

**91.'ஒருமை – பன்மை' பிழைகளற்ற வாக்கியங்களைக் கண்டறிக:**

I. என் புத்தகம் இதுவல்ல.

II. என் புத்தகம் இதுவன்று.

III. ஆடைகள் கிழிந்துவிட்டது.

IV. ஆடைகள் கிழிந்துவிட்டன.

a) I மற்றும் III

b) II மற்றும் IV

c) III மற்றும் IV

d) I மற்றும் IV

e) விடை தெரியவில்லை

விடை: b

**92.ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

a) அரசர்கள் நல்லாட்சி செய்தார்.

b) பசு கன்றை ஈன்றன.

c) மேகங்கள் சூழ்ந்து கொண்டது.

d) குழலி நடனம் ஆடினாள்.

e) விடை தெரியவில்லை

விடை: d

**93.ஒருமை - பன்மை பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக.**

a) பகைவர் நீவீர் அல்லர்

b) பகைவர் நீவீர் அல்லீர்

c) பகைவர் நீவீர் அல்லோம்

d) பகைவர் நீவீர் அல்ல

e) விடை தெரியவில்லை

விடை: b

**94.பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.**

a) அவள் அன்று

b) அவள் அல்ல

c) அவள் அல்லள்

d) அவள் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**95.சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக**

a) பழம்

b) பழங்கள்

c) பழக்குலை

d) பழக்குவியல்

e) விடை தெரியவில்லை

விடை: c

**96.ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

a) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்றான்

b) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்

c) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்கள்

d) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறது

e) விடை தெரியவில்லை

விடை: b

**97.பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.**

I. பா - பாக்கள்

II. ஈ -ஈக்கள்

III. கா - காக்கள்

IV. மடு - மடுக்கள்

a) I, IV

b) I, II

c) II, III

d) III, IV

e) விடை தெரியவில்லை

விடை: b

**98.ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

a) இது பழம் அல்ல. இவை பழங்கள் அன்று

b) இது பழம் அன்று. இவைகள் பழங்கள் அல்ல

c) இது பழம் அன்று. இவை பழங்கள் இல்ல

d) இது பழம் இல்ல. இவை பழங்கள் அன்று

e) விடை தெரியவில்லை

விடை: b

**99.ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

a) அன்னமய்யாவையும் புது ஆளையும் அவர்கள் வரவேற்றார்கள்

b) அன்னம்மய்யாவையும் புது ஆளையும் அவர்கள் வரவேற்றான்

c) அன்னம்மய்யாவையும் புது ஆளையும் அவர்கள் வரவேற்றன

d) அன்னம்மய்யாவையும் புது ஆளையும் அவர்கள் வரவேற்கின்றன

e) விடை தெரியவில்லை

விடை: a

**100. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

a) கலிங்க வீரர் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினார்கள்

b) கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினர்

c) கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினான்

d) கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடியது

e) விடை தெரியவில்லை

விடை: b